வருடாந்த அறிக்கை
2022

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை

01 உள்ளடக்கம்

பக்கம்

01	உள்ளடக்கம்	03
02	அட்டவணைகளின் பட்டியல்	06
03	புகைப்பட பட்டியல்	07
04	எமது தொலைநோக்கு மற்றும் இலட்சியப் பணி	09
05	நிறுவனம் பற்றிய தகவல்கள்	10
O6	பிரதான குறிக்கோள்களும் பணிகளும்	11
07	தலைவரின் மதிப்பாய்வுரை	12
08	பணிப்பாளர்கள்	15
09	பணிப்பாளர்களின் அறிக்கை	18
10	கணக்காய்வுக் குழுவின் அறிக்கை	19
11	நிறுவன ஆளுகை அறிக்கை	21
12	2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம்(2022 சனவரி 01 முதல் டிசெம்பர் 31 வரை)	23
12.1.	சட்ட நடவடிக்கைகள்	23
12.1.1.	அதிகாரம் வாய்ந்த அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள்	23
12.1.2.	அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள்	24
12.2.	புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனை சான்றிதழ் பாடநெறி (இரண்டாம் மாணவர் தொகுதி)	25
12.3.	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆட்படுதல் ஆலோசனை சான்றிதழ் பாடநெறி	26
12.4.	சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனை சான்றிதழ் பாடநெறி	26

12.5.	உலக சுகாதார அமைப்பினால் நடத்தப்பட்ட இலங்கையில் தொலைபேசி ஆலோசனை பற்றிய மெய்நிகர் பயிற்சிச் செயலமர்வு	26
12.6.	புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனை சான்றிதழ் பாடநெறியின் பயிற்றப்பட்ட ஆலோசனை உத்தியோகத்தர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்	26
12.7.	1948 புகையிலை மற்றும் மதுசாரத்திலிருந்து விடுபடுவதற்கான உதவி தொலைபேசி சேவை	27
12.8.	இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறு தொழில்முயற்சிப் பிரிவின் கள உத்தியோகத்தர்களுக்கான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்	27
12.9.	NATA சட்டத்திற்கான உத்தேச திருத்தங்கள் மீதான மீளாய்வுக் கூட்டம்	28
12.10.	இலங்கையில் புகையிலை பயிர்ச்செய்கைக்கான மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துவது பற்றிய முன்னோடிக் கருத்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் மதிப்பீடு.	30
12.11	மொனராகலை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் புகையிலை பயிர்ச்செய்கைக்கான மாற்றுப் பயிர்கள் தொடர்பில் விவசாய உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கான செயலமர்வு.	31
12.12.	புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு மீதான தேசிய கருத்தரங்கு - 2022	32
12.13.	NATAவின் நெறிமுறைகள் மீளாய்வுக் குழுவைத் தாபித்தல்	34
12.14.	பாடசாலைப் பாடப்புத்தகங்களில் உள்ளடக்குவதற்காக புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு தொடர்பான சுகாதார செய்திகளை உருவாக்குதல்	35
12.15.	கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 20/2020ஆம் இலக்க சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதை மதிப்பிடுதல்	36
12.16.	புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனைச் சான்றிதழ் பாடநெறியை டிப்ளோமோ நிலைக்கு தரமுயர்த்துதல்.	36
12.17.	உலகளாவிய வயது வந்தோர் புகையிலை மீளாய்வு -2020	36
12.18.	தரவு முதல் கொள்கை வரை தலைப்பிலான செயலமர்வு	36
12.19.	புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை இற்றைப்படுத்துதல் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தீவிர உள்நோயாளிகள் பிரிவு/ புனர்வாழ்வு நிலையம்/செயலில் உள்ள பொது மற்றும் உடற்தகுதி பிரிவு)	36
12.20.	ஊடக செயற்பாடுகள்	37
12.21.	திரைப்பட மீள்பார்வை அறிக்கை சுருக்கம்	38
12.22.	ஊடக விருது வழங்கும் விழா- 2022	39

12.23.	V NATA ஊடக மீறல் மொபைல் பயன்பாடு	40
12.24.	VNATA அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் மொபைல் பயன்பாடு	40
12.25.	சர்வதேச மாநாடுகள்	41
12.26.	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலையற்ற வலயங்களை மீண்டும் செயல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.	41
12.27.	புகையிலை இல்லாத வலயங்களை உருவாக்குவதில் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் பங்களிப்பைப் பாராட்டுதல்.	44
12.28.	மேல் மாகாணத்தில் சுகாதார தொழில்வாண்மையாளர்களை விழிப்பூட்டல்	44
12.29.	மருத்துவ இளங்கலை பட்டதாரிகளுக்கு புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு பற்றிய பாடவிதானத்தை உருவாக்குதல்	45
12.30.	மாத்தறை மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம	46
12.31.	பல்கலைக்கழக மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுசார தடுப்பு பற்றிய ஆற்றல் விருத்தி பயிற்சி (ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்)	47
12.32.	பல்கலைக்கழக மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுசார தடுப்பு பற்றிய ஆற்றல் விருத்தி பயிற்சி (உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம்)	48
12.33.	கிராம உத்தியோகத்தர்களை வலுவூட்டுவதன் ஊடாக மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் தரை மட்ட புகையிலை மற்றும் மதுசார தடுப்பு செயற்பாடுகளை வலுப்படுத்துதல்	48
12.34.	NATA சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி	49
12.35.	தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைந்து நடத்தப்பட்ட பேருந்து நடத்துனர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கான செயலமர்வு	49
12.36.	புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு தொடர்பான செயலமர்வு - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	50
13	நிதிசார் முன்னேற்றம் (2022 சனவரி 01 முதல் டிசெம்பர் 31 வரை)	52
அ.	நிதிக் கூற்றுக்கள்	53
ஆ.	நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	58
இ.	கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை	68

02 அட்டவணைகளின் பட்டியல்

பக்கம்

அட்டவணை 1	NATA சட்டத்தின் கீழ் மதுவரி உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்	23
அட்டவணை 2	NATA சட்டத்தின் கீழ் பொலீஸ் உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்	23
அட்டவணை 3	1948 இற்குக் கிடைத்த அழைப்புகள் பற்றிய விபரங்கள்	28
அட்டவணை 4	திரைப்பட மீள்பார்வை பற்றிய கண்ணோட்டம்	44
அட்டவணை 5	VNATA பயன்பாட்டிற்கான பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை	47
அட்டவணை 6	VNATA பயன்பாட்டிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் மொத்த எண்ணிக்கை	47
அட்டவணை 7	ஒவ்வொரு பிரிவிற்குமாக கிடைத்த விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை	47
அட்டவணை 8	புகையிலை இல்லாத வலயங்களை மீண்டும் செயல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்கள்	49

03 புகைப்பட பட்டியல்

புகைப்படம்


01, 02 & 03	சான்றிதழ் வழங்கும் விழாவின் சிறப்பம்சங்கள்
04 & 05	பங்கேற்பாளர்கள் நிகழ்ச்சியின் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்
06	கொழும்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி
07 & 08	குருநாகல் மாவட்டத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி
9,10,11,12,13,14,15,16, 17&18	புகையிலை மற்றும் மதுசாரம் மீதான உபகுழுவுக்கான வரிவிதிப்பு சூத்திரத்தை உருவாக்குவதற்கான உபகுழு கூட்டங்கள்.
19 & 20	வளவாளர்கள் தங்கள் சமர்ப்பணங்களை மேற்கொள்ளல்
21	பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுதல்
22,23,24,25,26, 27,28 & 29	விண்ணப்பதாரர்கள் வாய்மூல சமர்ப்பணங்களை மேற்கொள்ளல்
30, 31, 32 & 33	நிகழ்வின் சிறப்பம்சங்கள்
34, 35, 36, 37, 38 & 39	நிகழ்வின் சிறப்பம்சங்கள்
40	குருநாகலில் பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி
41,42 & 43	மாத்தறையில் நடைபெற்ற நிகழ்ச்சி
44, 45, 46 & 47	நிகழ்வில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு விருதுகள் வழங்கப்படுதல்
48, 49 & 50	சுகாதார தொழில்வாண்மையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்
51 & 52	நிகழ்வின் சிறப்பம்சங்கள்
53, 54 & 55	பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சி
56, 57 & 58	பல்கலைக்கழக மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுசார தடுப்பு பற்றிய ஆற்றல் விருத்தி பயிற்சி (உண்ணாட்டு மருத்தவக் கல்வி நிறுவகம்)

59 & 60	மாத்தறை பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி
61 & 62	பேருந்துகளில் 1948 க்விட்லைன் ஸ்டிக்கர்களை ஒட்டுதல்
63 & 64	தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆதரவுடன் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி
65 & 66	புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கள அதிகாரிகளுக்கான புகையிலை மற்றும் மதுபானம் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

04 எமது தொலைநோக்கு மற்றும் இலட்சியப் பணி

தொலைநோக்கு

புகையிலை மற்றும் மதுசாரம் அற்ற நாடும் மக்களும்



இலட்சியப்



புகையிலை மற்றும் மதுசாரம் காரணமாக ஏற்படும் தீமைகளிலிருந்து நம் சமூகத்தை விடுவிப்பதற்காக அனைத்து சமூகப் பிரிவுகளையும் அணிதிரட்டுதல்.

05 நிறுவனம் பற்றிய தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை

சட்ட வடிவம்

2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

11வது மாடி, பிரிவு A, செத்சிறிபாய இரண்டாம் கட்டம் II, பத்தரமுல்லை.

பணிப்பாளர் சபை

பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ	தலைவர்
டாக்டர் லக்க்ஷ்மி சோமதுங்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திருமதி. பீ.எம்.எஸ்.பண்டார	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு. ஆர்.பீ.சத்குமார	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திருமதி.ஹிரண்யா பெரேரா	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திருமதி.கமனீ குணவர்தன	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.எம்.ஜே.குணசிறி	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.சுதீர ஜயரத்ன	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.சாக்ய நாணாயக்கார - (அழைப்பாளர்)	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.எல்.கமல் சில்வா	பணிப்பாளர் சபை உறுப்பினர்
வண.எல்லே குணவங்ச தேரர்	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.சுனில் சாந்த வீரசேகர	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.சுமித் அபேசிங்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திருமதி.விஜயானீ ரத்நாயக்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமையதிபதி, இல.306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை.

வங்கி

இலங்கை வங்கி

முகாமைத்துவ குழு

பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ	தலைவர்
திருமதி.அனுஷிகா கோரளகே	கணக்காளர்
திரு.விராஜ் பண்டாரநாயக்க	சட்ட அலுவலர்
செல்வி.சானிக்கா ரணதுங்க	நிர்வாக உத்தியோகத்தர்

06 பிரதான குறிக்கோள்களும் பணிகளும்

பிரதான குறிக்கோள்கள்,

- பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காக புகையிலை மற்றும் மதுசாரம் (மற்றும் பிற போதைப்பொருள்) தொடர்பான பரந்த மற்றும் விசேட கொள்கைகளை இனங்காணுதல்.
- புகையிலை உற்பத்திப் பொருட்களினதும் மது வகைகளினதும் உற்பத்தி, சந்தைப்படுத்தல், விளம்பரம் மற்றும் பாவனையை மதிப்பீடு செய்தல் மற்றும் கண்காணித்தல் மூலம் புகையிலை மற்றும் மதுசாரம் மூலம் ஏற்படும் தீங்குகளை இல்லாதொழித்தல்.
- ஆட்களுக்கு குறிப்பாக, சிறுவர்களுக்கு புகையிலை மற்றும் மதுசார உற்பத்திகளுக்கான அணுகலைக் குறைப்பதன் மூலம் அவர்கள் புகைபிடிப்பதை அல்லது மது அருந்துவதை அதைரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- தூய்மையான காற்றோட்டத்தினைப் பாதுகாத்தல் பற்றிய சட்டங்களை ஊக்குவித்தல், நிறைவேற்றுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் புகையிலை மற்றும் மதுசாரம் கிடைக்கும் இடங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அவற்றிலிருந்து சமூகத்தைப் பாதுகாத்தல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் என்பவற்றிலிருந்து மக்களுக்கு ஏற்படும் தீங்குகளைத் தடுப்பதற்காக புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட பிற அனைத்து உபாயமார்க்க நடவடிக்கைகளையும் முன்மொழிந்து நடைமுறைப்படுத்துதல்.

பிரதான பணிகள்,

- புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசியக் கொள்கையைச் செயற்படுத்துவதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- வெகுசன ஊடக அனுசரணை மூலமும் சமுதாய அடிப்படையிலான கருத்திட்டங்கள் மூலமும் சுகாதார மேம்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் உதவியளித்தல்.
- புகையிலை உற்பத்திப் பொருட்களையும் மதுசார உற்பத்திப் பொருட்களையும் நுகர்வதனால் எற்படும் தீங்கைக் கூடியளவு குறைப்பதற்கான வழிமுறைகளை விதந்துரைத்தல்.
- சட்டவிரோத ஒளடதப் பயன்பாட்டை தடுப்பதற்காக அல்லது குறைப்பதற்காக தேசிய ஆபாயகரமான ஒளடத கட்டுப்பாட்டுச் சபையின் கலந்தாலோசனையுடன் வழிமுறைகளை விதந்துரைத்தல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசியக் கொள்கையை செயற்படுத்துவதற்கு அவசியமான சட்டரீதியான, வரிவிதிப்பு, நிர்வாக மற்றும் தேவையான ஏனைய வழிமுறைகளை விதந்துரைத்தல்.
- அத்தகைய கொள்கை செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.
- கொள்கை நடவடிக்கைகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்தலும் அவசியமாகக்கூடியவாறாக கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு மதியுரையளித்தலும்.
- புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான சிக்கல்கள் பற்றிய ஆராய்ச்சிகளை ஊக்குவித்தலும் அவற்றுக்கு உதவியளித்தலும்.
- புகையிலை உற்பத்திப் பொருட்களினதும் மதுசார உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்தி, நுகர்வு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பொருளாதார, சுகாதார மற்றும் ஏனைய சிக்கல்களைக் கண்காணித்தல்.
- புகையிலை மற்றும் மதுசாரத்தின் பயன்பாடு தொடர்பாக ஆராய்ச்சிகளை நடாத்துதல், மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசியக் கொள்கையை செயற்படுத்துவதில் அவசியமான சகல அரச அல்லது அரச சாரா முகவர் நிலையங்கள் மற்றும் தனியார் துறை அமைப்புகள் ஆகியவற்றின் பங்கேற்பினைப் பெற்றுக்கொள்ளல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசியக் கொள்கையைச் செயற்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் தீவிரமான சமுதாயப் பங்கேற்பினை ஊக்குவித்தல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான சிக்கல்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெறுதலும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விதந்துரைத்தலும்.
- புகையிலை உற்பத்திப் பொருட்கள் மதுசார உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலிருந்தும் நுகர்விலிருந்தும் எழுகின்ற தீங்கைக் கூடியளவு குறைப்பது தொடர்பாக அரசாங்கத்தினாலும் அரசாங்கஞ்சாரா முகவர் நிலையங்களினாலும் ஒழுங்கமைப்புகளினாலும் நிறைவேற்றப்படும் எல்லாச் செயற்பாடுகளுக்குமான ஒருங்கிணைப்பு முகவர் நிலையமாகச் செயற்படுதல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான எல்லா நுண்ணாய்வுகளினதும் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பில் உள்ளூர், பிராந்திய மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புகளுடன் இணைந்து செயலாற்றுதல்.

07 தலைவரின் மதிப்பாய்வுரை



பணிப்பாளர் சபை சார்பில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட நிதி நிலை பற்றிய நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதியின் அறிக்கை என்பவற்றை முன்வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (NATA) 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. NATA என்பது இலங்கையில் புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு மற்றும் ஒழிப்பின் மையப்புள்ளியாகும்.

செயலாற்றுகை

2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் கீழ், அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளினாலும் அதிகாரசபையினாலும் 1101 சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மதுசாரம் மற்றும் புகையிலை பயன்பாடு தடுப்பு மற்றும் ஒழிப்பிற்கான (இரண்டாம் தொகுதி) ஆலோசனை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தை NATA விற்கு வழங்க முடிந்ததோடு அறுபத்தொரு பங்கேற்பாளர்கள் சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக முடித்து சான்றிதழ்களைப் பெற்றனர். இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்துடன் இணைந்து புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆட்படுதல் ஆலோசனை சான்றிதழ் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டதுடன் சான்றிதழ் பாடநெறியில் 29 விண்ணப்பதாரிகள் பங்குபற்றினர். சான்றளிக்கப்பட்ட ஆலோசகர்களுக்கான மறுசீராய்வுக் கூட்டங்களும் அவ்வப்போது நடத்தப்பட்டன. NATAவிற்கு 1948 உதவிச் சேவை ஊடாக 2022 ஆம் ஆண்டில் மொத்தம் 18,422 அழைப்புகள் கிடைத்ததோடு 3,666 ஆலோசனை அழைப்புகளும் இருந்தன.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறு தொழில்முயற்சிப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள 150 கள உத்தியோகத்தர்களுக்கு கம்பஹ, களுத்துறை, கொழும்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பது மற்றும் ஒழிப்பது தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டது.

மதுசாரம் மற்றும் புகையிலை தடுப்பு மற்றும் ஒழிப்பு பற்றிய விஞ்ஞான ரீதியான தகவல்கள் ஆண்டுதோறும் புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு பற்றிய தேசிய கருத்தரங்கில் (NSTAP) பரப்பப்படுகின்றன. மதுசாரம் மற்றும் சிகரெட் பயன்பாடு பொருளாதாரம் மற்றும் சுகாதாரத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம், சுற்றாடல் நிலைத்தன்மை மற்றும் மதுசாரம் மற்றும் புகையிலைக் கட்டுப்பாடு, மதுசாரம் மற்றும் புகையிலைக் கட்டுப்பாட்டின் சட்ட அம்சங்கள், மதுசாரத்தின் சமூகத் தாக்கங்கள், புகையிலைப் பயன்பாடு, மதுசாரம் மற்றும் புகையிலைப் பயன்பாட்டைத் தடுத்தல் மற்றும் ஒழித்தல் உட்பட ஆறு கருப்பொருள்களுக்குள் ஒழுங்கமைக்கப்பட்ட இருபத்தொரு (21) சுருக்கங்களைக் கொண்டு இந்த ஆண்டு மாநாடு அமைந்திருந்தது.

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான அம்சங்களில் ஆராய்ச்சிகளின் நம்பகத்தன்மை மற்றும் தரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் புகையிலை மற்றும் மதுசாரத் தொழில்துறையின் நோக்கங்களுக்கு அமைவாக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்காதிருப்பதனை நோக்கமாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டில் நெறிமுறைகள் மதிப்பாய்வுக் குழுவை (ERC-NATA) தாபிக்க NATA விற்கு முடிந்தது.

2022 ஆம் ஆண்டு அறுபது (60) சுகாதாரச் செய்திகள் உருவாக்கப்பட்டு அவை மூன்று பிரதான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. 978-624-5719-43-3 என்ற ISBN இலக்கத்துடன் சுகாதாரச் செய்திகளைக் கொண்டமைந்த சிறிய கையேடு வெளியிடப்பட்டது. உருவாக்கப்பட்ட செய்தித் தொகுப்பில் இருந்து சில சுகாதாரச் செய்திகள் தரம் 10 சிங்கள மொழிமூல விஞ்ஞான பாடப்புத்தகத்திலும் தரம் 11 தமிழ் மொழிமூல விஞ்ஞான பாடப்புத்தகத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன.

கல்வி நிறுவன வளாகங்களை புகையிலை சார்ந்த உற்பத்திப் பொருட்கள், மதுசாரம் மற்றும் பிற போதைப்பொருட்களின் பயன்பாடு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம் இடம்பெறாத வலயங்களாக மாற்றுவது தொடர்பாக 2020 ஜூலை 29 ஆம் திகதி கல்வி அமைச்சினால் 20/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையும் (NATA) ஒரு முக்கிய பங்குதாரராக இந்த சுற்றறிக்கையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் இந்த சுற்றறிக்கையை செயல்படுத்தும் அளவை மதிப்பிட NATA மதிப்பீடொன்றை நடத்தியது.

மொனராகலை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் புகையிலை பயிர்ச்செய்கைக்கான மாற்றுப் பயிர்கள் தொடர்பான விவசாய உத்தியோகத்தர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்களை மேம்படுத்துவதற்காக செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

2022 ஆம் ஆண்டில், NATA .ேபஸ்புக் பக்கம் மூவாயிரத்து தொள்ளாயிரம் (3900) பின்தொடர்பாளர்களைக் கொண்டிருந்தது. .ேபஸ்புக் பக்க அணுகல் மாதத்திற்கு 676,334 முதல் 150,000 வரை மாற்றமடைந்துள்ளது. நூற்று அறுபத்தேழு (167) யூடியூப் சந்தாதாரர்கள் இருந்ததுடன் மேலும் பொதுமக்களை அறிவூட்ட ஆறு வீடியோ கிளிப்புகள் யூடியூப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. புகையிலை மற்றும் மதுசாரக் கட்டுப்பாடு தொடர்பாக நான்கு ஊடகவியலாளர் சந்திப்புகள் நடத்தப்பட்டன. மதுசாரம் மற்றும் புகையிலை தடுப்பு தொடர்பாக 187 கட்டுரைகள் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன. தலைவர் 23 வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்று பொதுமக்களின் விழிப்புணர்வுக்கு பங்களித்தார். சமூக ஊடகப் பக்கங்கள் மற்றும் வலைப்பதிவுகளில் 45 செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

22 திரைப்படங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் அவற்றில் 11 திரைப்படங்கள் மது மற்றும் சிகரெட் காட்சிகளை உள்ளடக்கியதன் மூலம் NATA சட்டத்தை மீறியது கண்டறியப்பட்டது. உரிய நடவடிக்கை எடுக்குமாறு பகிரங்க அரங்காட்டுகைச் சபைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புகையிலை மற்றும் மதுபானங்களைத் தடுப்பதற்கான மையப் புள்ளியான புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையானது (NATA) இலங்கை ஊடகவியலாளர்கள் நாட்டில் புகையிலை மற்றும் மதுபானங்களைத் தடுப்பதற்காக வழங்கும் பங்களிப்பைப் பாராட்டும் நோக்கத்துடன் அவர்களுக்காக ஆலோசனை நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்தது.

அதிகார சபையானது ஆனது V NATA ஊடக பயன்பாடு மூலம் ஊடக மீறல்கள் குறித்த தகவல்/விசாரணைகளை சேகரித்ததோடு அந்த விசாரணைகளுக்கு சட்ட நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. இந்த கையடக்கத் தொலைபேசி மென்பொருளின் மூலம் 2022 ஜனவரி முதல் டிசம்பர் வரை 200க்கும் மேற்பட்ட பொதுமக்களின் புகார்கள் கிடைத்துள்ளன. V NATA அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகள் மூலம் பதிவுசெய்யப்பட்ட அலுவலர்களின் (ஊழியர்கள்) மொத்த எண்ணிக்கை 213 ஆகவும், பெறப்பட்ட மொத்த அறிக்கைகளின் எண்ணிக்கை 32 ஆகவும் இருந்தது.

2022 பெப்ருவரி 3 ஆம் திகதி நடைபெற்ற உலக சுகாதார அமைப்பிற்கான (WHO) தரப்பினர்களின் மாநாடு (COP) மற்றும் தரப்பு உறுப்பினர் (MOP) கூட்டங்களில் நான் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு 2022 நவம்பர் 21 முதல் 25 வரை நடைபெற்ற COP9 மற்றும் MOP2 தெரிவு செய்யப்பட்ட பணியகங்களின் இரண்டாவது ஒருங்கிணைந்த கூட்டத்திலும் பங்கேற்றேன்.

புகையிலை அற்ற வலயங்களை மீளச் செயற்படுத்தும் நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒன்பது மாகாண செயலமர்வுகள் நடத்தப்பட்டன. புகையிலை இல்லாத வலயங்கள் (TFZs) மீண்டும் செயல்படுத்தப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பின்னர், NATA செயலாக்கங்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ததோடு செயல்படும் நிலையிலுள்ள கிட்டத்தட்ட 230 புகையிலை அற்ற வலயங்களை NATA அடையாளம் கண்டது. பின்னர் யுவுயு ஆனது புகையிலை அற்ற வலயங்களை உருவாக்குவதில் ஈடுபட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்களை (PHI) பாராட்டுவதற்காக ஒரு ஆய்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது. மேலும், NATA புகையிலை அற்ற வலயங்களை நிறுவுவது பற்றிய சம்பவக் கற்கைகள் பற்றிய புத்தகமொன்றை வெளியிட்டது.

மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கு புகையிலை மற்றும் மதுபானங்களைத் தடுப்பதில் சமூக ஈடுபாட்டை மேம்படுத்துவது தொடர்பான பயிற்சியை NATA நடத்தியது.

NATA ஆனது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் (KDU) இணைந்து இணை சுகாதார விஞ்ஞான பீடத்தின் மாணவர்களுக்கான அறிவை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை KDU மருத்துவமனை கேட்போர் கூடத்தில் நடத்தியது.

மனித வள அபிவிருத்தி

NATA இல் 2022.12.31 ஆம் திகதியின் நிலவரப்படி ஒரு கணக்காளர், ஒரு சட்ட அலுவலர், ஒரு நிர்வாக உத்தியோகத்தர், 02 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், 06 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (02 ஒப்பந்த அடிப்படையில்), ஒரு முகாமைத்துவ உதவியாளர், 02 தொழிலாளர்கள் மற்றும் 02 சாரதிகள் உட்பட 18 பணியாளர்கள் இருந்தனர். பணியாளர்கள் கோரிய அடிப்படை நலன்புரி வசதிகளை NATA தொடர்ந்து செய்து வந்தது.

நன்றி

நாட்டில் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான முன்னெடுப்புகளைத் தொடர்ச்சியாக பேணிச் செல்வதன் பொருட்டு தலைமைத்துவத்தை வழங்குவதற்காக அதிகார சபையின் பணிப்பாளர் சபை மீது நம்பிக்கை வைத்தமைக்காகவும் வழிகாட்டுதலுக்காகவும் கௌரவ சுகாதார அமைச்சர் டாக்டர் கெஹலிய ரம்புக்வெல்ல அவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தொற்றாத நோய்களின் பின்னணியிலும், சுகாதாரம் பற்றிய ஒட்டுமொத்தக் கண்ணோட்டத்திலும் புகையிலை மற்றும் மதுசாரக் கட்டுப்பாட்டின் பொருத்தத்தையும் முக்கியத்துவத்தையும் அவர் தெளிவாகக் காட்சிப்படுத்தினார்.

முடிவெடுக்கும் செயன்முறையின் பயனுறுதிறனை அதிகரிக்க பல நடவடிக்கைகளை செயல்படுத்திய சுகாதாரச் செயலாளர் உட்பட அமைச்சின் பிற மூத்த அதிகாரிகள், எங்கள் முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களுக்கு சிறப்பாக பதிலளித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகங்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உண்மையான பங்காளிகள் என்ற உணர்வில் அவர்கள் வழங்கிய உடனடி ஆதரவானது அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவியது. புகையிலை மற்றும் மதுசாரக் கட்டுப்பாட்டில் பல புத்தாக்கத் திட்டங்களை முன்னெடுக்க அதிகார சபைக்கு முடிந்ததுள்ளதோடு அவற்றில் பெரும்பாலானவை இந்த அறிக்கையில் விசேடமாக காட்டப்பட்டுள்ளன. அமைச்சின் தவறாத ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

அதிகார சபை அதன் செயற்பாடுகளை திறம்பட நிறைவேற்றுவதற்காக ஏழு துணைக்குழுக்களை அமைத்துள்ளது. புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கான துணைக்குழு, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான வரிவிதிப்பு சூத்திரத்தை உருவாக்குவதற்கான துணைக்குழு, புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய துணைக்குழு, புகையற்ற புகையிலை பற்றிய துணைக்குழு, மருத்துவ இளங்கலை மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு குறித்த பாடவிதானத்தை உருவாக்குதல் பற்றிய துணைக்குழு, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையின் ஊடகக் கொள்கையை செயல்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் பற்றிய துணைக்குழு மற்றும் புகையிலை செய்கைக்கான மாற்றுப் பயிர்களை அறிமுகம் செய்வதற்கான துணைக்குழு

என்பன அந்த ஏழு துணைக் குழுக்களாகும். சுகாதார அமைச்சு, நுரையீரல் மருத்துவச் சங்கம், மனநல மருத்துவச் சங்கம், நிதி அமைச்சு, கமத்தொழில் அமைச்சு, கொள்கை கற்கைகள் நிறுவனம், கொழும்புப் பல்கலைக்கழகம், சுதேச மருத்துவ நிறுவனம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் துணைக்குழு உறுப்பினர்களுக்கு அவர்களின் அர்ப்பணிப்பிற்காக நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

உலக சுகாதார அமைப்பானது (WHO), உலக சுகாதார அமைப்பின் புகையிலைக் கட்டுப்பாடு பற்றிய செயலகத்துடன் (FCTC) இணைந்து எமது நம்பகமான பங்காளியாக இருப்பதுடன் உலக, வலய மற்றும் நாடு ஆகிய மட்டங்களில் உலக சுகாதார அமைப்பிடமிருந்து எமக்குக் கிடைக்கும் தன்னியலார்ந்த ஆதரவின் பெறுமதியை மதிப்பிட முடியாது. உலக சுகாதார அமைப்பு மற்றும் FCTC இலிருந்து எமக்குக் கிடைக்கும் வளங்களும் தொழில்நுட்ப ஆலோசனைகளும் நம் நாட்டில் புகையிலை கட்டுப்பாட்டில் அடையப்பட்டுள்ள சாதனைகளுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளன.

இறுதியாக, அதிகார சபையின் வெற்றிக்காக வழங்கிய மதிப்புமிக்க பங்களிப்பிற்காகவும், வழிகாட்டலுக்காகவும் பணிப்பாளர் சபைக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் சமாதி டபிள்யூ ராஜபக்ஷ
தலைவர்
புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை

08 பணிப்பாளர்கள்

சுகாதார அமைச்சின் பிரதிநிதி, நீதி அமைச்சின் பிரதிநிதி, கல்வி அமைச்சின் பிரதிநிதி, வெகுசன ஊடக அமைச்சின் பிரதிநிதி, வர்த்தக அமைச்சின் பிரதிநிதி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பிரதிநிதி, தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர், மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பிரதிநிதி என்றவாறு பதவிவழி அதிகாரத்தில் நியமனம் பெறும் ஒன்பது உறுப்பினர்களும் சுகாதார அமைச்சரால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களுமாக பணிப்பாளர் சபையானது பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது.



பேராசிரியர் (டாக்டர்) சமாதி டபிள்யூ. ராஜபகஷ
தலைவர்
புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை



டாக்டர். லக்ஷ்மி சோமதுங்க
மேலதிக செயலாளர் (பொது சுகாதாரம்)
சுகாதார அமைச்சு



திருமதி. பீ.எம்.எஸ். பண்டார
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)
வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு



திரு. ஆர்.பீ.சத்குமார
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு



திருமதி. ஹிரண்யா பெரேரா
சிரேஸ்ட உதவிச் செயலாளர்
நீதி அமைச்சு

திருமதி. கமனி குணரத்ன
கல்விப் பணிப்பாளர்
கல்வி அமைச்சு





திரு.எம்.ஜே.குணசிறி
மதுவரி ஆணையாளர் நாயகம்
மதுவரித் திணைக்களம்

திரு.சுதீர ஐயரத்ன
பணிப்பாளர்
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு





திரு. ஷாக்ய நாணாயக்கார- (அழைப்பாளர்)
தலைவர்
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை



திரு. எல்.கமல் சில்வா
சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்



வண.எல்லே குணவன்ச தேரர்
கௌரவ சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டார்.



திரு.சுமித் அபேசிங்க
கௌரவ சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டார்.



திருமதி விஜயானி ரத்நாயக்க
கௌரவ சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டார்.



திரு.சுனில் சாந்த வீரசேகர
கௌரவ சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டார்.

09 பணிப்பாளர்களின் அறிக்கை

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தமது அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை பணிப்பாளர் சபை மகிழ்ச்சியுடன் முன்வைக்கின்றது.

பிரதான செயற்பாடுகள்

2022 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு அமைந்தன,

- புகையிலை மற்றும் மதுசாரத் தொழில்துறையின் தலையீடுகளை எதிர்ப்பதற்கும் கண்காணிப்பதற்கும் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- புகையிலை மற்றும் மதுசாரப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பொருளாதார, சுகாதார மற்றும் பிற சிக்கல்களைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளைக் கண்டறிதல்
- சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு புகையிலை மற்றும் மதுவை நிறுத்துதல் மற்றும் ஒழிப்பது குறித்து தேவையான பயிற்சி மற்றும் 1948 உதவி தொலைபேசிச் (க்விட் லைன்) சேவையை வலுப்படுத்துதல்.
- விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைத் திட்டங்களுக்கான கல்விசார் பொருட்களை உருவாக்குதல்
- ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக NATA விற்கான நெறிமுறைகள் மதிப்பாய்வுக் குழுவை நிறுவுதல்
- புகையிலை மற்றும் மதுசார கட்டுப்பாடு பற்றிய கருத்தரங்கம் (புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு பற்றிய தேசிய கருத்தரங்கம்)
- செயலற்ற புகைப்பழக்கத்தின் அளவு மற்றும் புகையிலைப் புகையால் ஏற்படும் வளி மாசுபாடு குறித்து பொது மக்களுக்கும் குறிப்பாக தொடர்புடைய தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தல்

அதிகார சபையின் மதிப்பாய்வு

2022 டிசம்பர் 31 இல் அதிகார சபையின் நிதி நடவடிக்கைகளின் நிலைமையானது பக்கம் 60 இல் உள்ள நிதி நிலை அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. நிதியாண்டில் அதிகார சபை பற்றிய மதிப்பீடு பக்கம் 11 மற்றும் 12 இல் தலைவரின் மதிப்பாய்வில் கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்கால அபிவிருத்தி

நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான தகவல்கள் 11 ஆம் பக்கத்தில் தலைவரின் மதிப்பாய்வில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆண்டு முழுவதும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் இயக்கங்கள் பக்கம் 60 இல் உள்ள நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்பு 14 இல் தரப்பட்டுள்ளன.

கணக்கீட்டுக் கொள்கைகள்

அதிகாரசபையின் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதி நிலை பற்றிய அறிக்கையின் 64 முதல் 66 வரையான பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து இயங்கும் அமைப்பு

நிறுவனம் தொடர்ந்து இயங்கும் என்ற கருத்தின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் அதிகாரசபை அதன் செயற்பாடுகளுக்கு போதிய வளங்களை கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை திருப்தி அடைகின்றது.

கணக்காய்வாளர்களை நியமித்தல்

1971 ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, கணக்காய்வாளர் தலைமையதிபதி, அதிகார சபையின் கணக்காய்வாளராக இருப்பதுடன் 2022 டிசம்பர் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிசார் செயல்பாடுகள் தொடர்பில் அவர் வருடாந்த கணக்காய்வினை மேற்கொண்டுள்ளார்.

பேராசிரியர் (டாக்டர்) சமாதி டபிள்யூ. ராஜபக்ஷ
தலைவர்
புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை

10 கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2022

கணக்காய்வுக் குழுவானது அதன் கடமைகளை 2010.12.14 ஆம் திகதிய பீஈடீ 55 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறைவேற்றியது.

மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் ஏற்புடையதான ஏனைய சட்டத் தேவைகளுக்கும் அமைவாக நிதி அறிக்கையிடல் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துதல், தொடர்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தலுடன் அமைந்தொழுகாத விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு விதப்புரைகளை வழங்குவதற்காக உரிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துதல் மற்றும் உள்வாரி.்.வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகளையும் முகாமைத்துவ கடிதங்களையும் மீளாய்வு செய்தல் மற்றும் போதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை செயற்படுத்துதல் என்பவற்றுக்காக கணக்காய்வுக் குழுவானது பணிப்பாளர் சபைக்கு மேற்பார்வைப் பணியில் ஆதரவளிக்க வேண்டும்.

கணக்காய்வுக் குழுவானது அதிகார சபையின் மூன்று நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டமைந்திருந்ததோடு வருடத்தினுள் வர்த்தக அமைச்சின் மேலதிகச் செயலாளர் தலைமை வகித்தார். திறைசேரியின் பிரதிநிதியாக தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து ஒரு அலுவலர் கணக்காய்வுக் குழுவின் ஒரு உறுப்பினராக பங்கேற்றார்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் மற்றும் சுகாதார அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் மேற்பார்வையாளர்களாக கலந்துகொண்டனர். நாட்டாவின் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அழைப்பின் பேரில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றனர்.

2022 ஆம் நிதியாண்டில் 2022 யூன் 01, 2022 செப்டெம்பர் 15, 2022 அக்டோபர் 19 மற்றும் 2022 டிசெம்பர் 06 ஆகிய திகதிகளில் நான்கு (04) கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுவானது,

- விடயங்களின் தன்மை, முகாமைத்துவம் வழங்கிய பதில்கள் மற்றும் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்பவற்றை உள்வாங்கி 2022 பெப்ருவரி மாதம் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான சில உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் ஆராயப்பட்டன.
- குழுவின் விதப்புரைகள் மீது தொடர்புடைய அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட பின்தொடரல் நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன.
- 2021 ஆம் ஆண்டுக்குரியதாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் எழுப்பப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் ஆராய்ப்பட்டு பொருத்தமான விதப்புரைகள் செய்யப்பட்டன.
- 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டு குறைபாடுகளை சரிசெய்வதற்கும், சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு அமைந்தொழுகாமை, மனிதவள முகாமைத்துவம், பெறுகை மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த நிர்வாகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆராயப்பட்டன.

கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள்

தலைவர் - திருமதி.பீ.எம்.எஸ்.பண்டார, வர்த்தக அமைச்சின் மேலதிகச் செயலாளர்

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் - திரு.ஆர்.பீ.சத்குமார, தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மேலதிகச் செயலாளர்

திரு.சுதீர ஜயரத்ன, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் பற்றிய அமைச்சின் பணிப்பாளர்

திறைசேரியின் பிரதிநிதி – திரு.கே.டீ.எஸ்.ஆர்.பெரேரா, மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்.

பிரதான உள்ளக கணக்காய்வாளர் - திருமதி.ஆர்.எஸ்.எம்.வசந்தா

கணக்காய்வு அத்தியட்சகர் - திரு.எஸ்.யூ.டீ.மானவசிங்க

திருமதி.பீ.எம்.எஸ்.பண்டார
வர்த்தக அமைச்சின் மேலதிகச் செயலாளர்
தலைவர் -கணக்காய்வுக் குழு
2023.02.07

11 நிறுவன ஆளுகை அறிக்கை

அதிகார சபையின் நிர்வாகத்திற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.

பணிப்பாளர்கள்

பணிப்பாளர் சபையானது ஒரு நிறைவேற்றுப் பணிப்பாளர், நிறைவேற்று அல்லாத நான்கு பணிப்பாளர்கள் மற்றும் பதவி வழி அதிகாரத்தில் நியமிக்கப்படும் ஒன்பது பணிப்பாளர்களைக் கொண்டமைந்துள்ளதோடு நிறைவேற்றுப் பணிப்பாளராக தலைவர் உள்ளார். மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியாகிய 2022 ஆம் ஆண்டில் பன்னிரண்டு பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

முகாமைத்துவக் குழு

அதிகாரசபையின் தலைவரின் தலைமையில் அதிகாரசபை முகாமைத்துவக் குழு உள்ளது. குழுவானது பொது முகாமையாளர், கணக்காளர், சட்ட அதிகாரி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது.

முகாமைத்துவக் குழு, அதிகார சபையின் அன்றாட நடவடிக்கைகள் பற்றிய முடிவுகளை எடுப்பதோடு கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் மூலோபாய நோக்கங்களை நிறைவேற்றுதல் மற்றும் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபைக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குகின்றது.

கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது 'நல்லாட்சிக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்' மற்றும் பொது நிதிச் சுற்றறிக்கைகளின்படி அமைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதோடு அதிகாரசபையின் மூன்று நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டமைந்துள்ளது. வர்த்தக அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர், குழுவின் தலைவராக இருப்பார்.

கணக்காய்வுக் குழு அதிகார சபையின் செயல்பாடுகளை சுயாதீனமாக பரிசோதித்து மதிப்பீடு செய்கிறது. அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பணியை சுகாதார அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு அதன் "உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின்" பிரகாரம் மேற்கொள்கின்றது.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில், நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை பக்கம் 15 இல் தரப்பட்டுள்ளது.

முதலீட்டுத் தொடர்புகளும் பொதுமக்களுக்கான பொறுப்புடைமையும்

அதிகார சபைகள் பொதுமக்களின் சார்பாக அரசாங்கத்தால் நிறுவப்பட்டு, உரித்துடைமையைக் கொண்டு இயக்கப்படுகின்றன. எனவே, அதிகாரசபையின் பணிப்பாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் அதிகார சபையின் முகாமைத்துவம் தொடர்பில் நேர்கோட்டு அமைச்சான சுகாதார அமைச்சுக்கும் நிதி அமைச்சின் பொதுத் திறைசேரிக்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

மேற்கண்ட பொறுப்பை நிறைவேற்றி வருடாந்த அறிக்கை, வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுத் திட்டம், காலாண்டு ரீதியான செயலாற்றுகை அறிக்கை ஆகியவை அவ் அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

ஜனநாயக உலகம் முழுவதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டமைந்த பாராளுமன்றம், பொது நிதிக்கான இறுதி அதிகார சபையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

அதிகாரசபையின் செயலாற்றுகை, நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிசீலனைக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒரு அரசாங்க பொறுப்புமுயற்சியாக இருப்பதால், அதிகார சபையானது பாராளுமன்றத்தின் "அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு" (COPE) க்கும் பொறுப்புகூற வேண்டும்.

ஊதியக் கொள்கை

பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் அதிகாரசபையின் ஊதியக் கொள்கை அமைக்கப்பட்டுள்ளது. பொதுத் திறைசேரியினால் பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன. ஊழியர்களின் சம்பளம் பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் சம்பள அளவுத்திட்டங்களின் மீது வழங்கப்படுகிறது.

உள்ளக கட்டுப்பாடு

அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் முறையாக அங்கீகரிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது என்பதற்கு நியாயமான உத்தரவாதம் அளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பராமரிப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உள்ளது.

செயல்பாட்டு நிறுவன அமைப்பு செயல்பாட்டில் உள்ளது. பணியாட்டொகுதியானது பொது முகாமையாளர், கணக்காளர், ஒரு சட்ட அதிகாரி, ஒரு நிர்வாக அலுவலர், இரண்டு ஆராய்ச்சி அலுவலர்கள், ஆறு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (நிரந்தர பதவிகள் 04, ஒப்பந்த அடிப்படையில் 02), இரண்டு ஆலோசகர்கள் (ஒப்பந்த அடிப்படையில்), ஒரு முகாமைத்துவ உதவியாளர், இரண்டு தொழிலாளர்கள் மற்றும் இரண்டு சாரதிகள் என்பவர்களைக் கொண்டமைந்துள்ளது. ஒவ்வொரு அதிகாரியும் தலைவர் மற்றும் பொது முகாமையாளரிடம் அறிக்கையிட வேண்டுமென்பதோடு பொது முகாமையாளர் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட வேண்டும்.

கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கும் அதன் மூலம் ஆர்வமுள்ள தரப்பினருக்கு சம வாய்ப்புகளை வழங்குவதற்கும் தேசிய பெறுகை வழிகாட்டல்கள் அதிகார சபையால் பின்பற்றப்படுகின்றன.

மூலதன வரவுசெலவுத் திட்டத்தை உள்ளடக்கிய வருடாந்த வரவு செலவுத் திட்டம் அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்டு சுகாதார அமைச்சுக்கும் நிதி அமைச்சுக்கும் அனுப்பப்படுகிறது.

12 2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம் (2022 சனவரி 01 முதல் டிசெம்பர் 31 வரை)

12.1. சட்ட நடவடிக்கைகள்

12.1.1. அதிகாரம் வாய்ந்த அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

NATA சட்டத்தின் கீழ் அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்

ஆட்டவணை1 NATA சட்டத்தின் கீழ் மதுவரி உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்

குற்றத்தின் தன்மை	தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை
சிறுவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல் பற்றிய குற்றம்	96
பொது இடத்தில் புகைபிடித்தல் பற்றிய குற்றம்	240
மொத்தம்	336

அட்டவணை2 NATA சட்டத்தின் கீழ் பொலீஸ் உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்

குற்றங்கள் (NATA சட்டத்தின் படி)	மாகாணம்									மொத்தம்
	மேல் மாகாணம்	வட மேல் மாகாணம்	வட மத்திய மாகாணம்	வடக்கு மாகாணம்	கிழக்கு மாகாணம்	ஊவா மாகாணம்	மத்திய மாகாணம்	தென் மாகாணம்	சப்ரகமுவ மாகாணம்	
31. இருபத்தி ஒரு வயதுக்குட்பட்ட நபர்களுக்கு புகையிலை உற்பத்தி அல்லது மதுபான உற்பத்திகளை விற்பனை செய்வதைத் தடை செய்தல்	8	1	1	-	-	-	1	9	-	20
32. புகையிலை உற்பத்தி அல்லது மதுபான உற்பத்திகளை விநியோகிப்பதற்கான விற்பனை இயந்திரங்களை நிறுவுவதை தடை செய்தல்	1	-	-	-	-	-	-	-	-	1
33. பரிந்துரைக்கப்பட்ட புகையிலை பொருட்களின் உற்பத்தி அல்லது விற்பனையை தடை செய்தல்	-	3	-	-	-	-	110	56	-	169
34.சுகாதார எச்சரிக்கை இல்லாமல் மற்றும் ஒவ்வொரு புகையிலைப் பொருளிலும் உள்ள தார், நிகோடின் உள்ளடக்கம் குறிப்பிடப்படாமல் உள்ள புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வதைத் தடை செய்தல்	-	-	103	-	-	-	223	3	-	329
35.புகையிலை அல்லது மதுபான விளம்பரங்களைத் தடை செய்தல்	-	-	-	-	-	-	-	2	-	2
36. அனுசரணைகளை தடை செய்தல்	-	-	-	-	-	-	-	-	-	0
37 புகையிலை உற்பத்திகள் அல்லது மதுசார உற்பத்திகளை இலவசமாக விநியோகம் செய்வதை தடைசெய்தல்	-	-	-	-	-	-	-	-	-	0
38. புகையிலை உற்பத்திகள் மற்றும் மதுசார உற்பத்திகளின் வர்த்தகக் குறியீடுகள் தொடர்பான குற்றங்கள்	-	2	-	-	-	-	-	40	-	42
39.பொதுமக்கள் அணுகக்கூடிய பகுதியில் புகைபிடிப்பது குற்றமாகும்	18	28	-	-	5	-	56	66	-	173
43. நானாவித குற்றங்கள்	12	3	1	-	-	-	4	9	-	29

12.1.2 அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

டன்ஹில் ஸ்விட்ச்

“டன்ஹில் ஸ்விட்ச்” மற்றும் “டபிள் ஸ்விட்ச்” தொடர்பாக நாடளாவிய ரீதியில் ஏராளமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு குறிப்பிட்ட தயாரிப்புகள் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளை மீறுவதாக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

ரோலிங் தாள்களை இறக்குமதி செய்தல்

சுருட்டுக்கு நிகரான காகிதக் கூம்புகளை உற்பத்தி செய்ய ரோலிங் தாள்களை இறக்குமதி செய்யும் கருத்திட்டம் NATA வின் தொடர்ச்சியான எதிர்ப்புகளால் நிறுத்தப்பட்டது.

இ சிகரெட்

இறக்குமதி செய்யப்பட்ட இ-சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டு, சுங்க மற்றும் மதுவரி திணைக்களத்தின் உதவியுடன் வழக்குகள் தொடரப்பட்டன.

புகையில்லா புகையிலை

புகையில்லா புகையிலை சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திரைப்படங்கள்

திரைப்படங்களில் மது மற்றும் புகையிலை காட்சிகளை திரையிடுவது தொடர்பில் நடவடிக்கை எடுத்ததன் பின்னர், அனைத்து திரைப்பட தயாரிப்பாளர்களும் NATA சட்டத்திற்கு இணங்கி செயற்பட வேண்டுமென்ற கட்டளையை மேதகு சனாதிபதியிடமிருந்து NATA விற்கு பெற முடிந்தது.

பீடி பாக்கெட்டுகளில் பட சுகாதார எச்சரிக்கைகள்

பட சுகாதார எச்சரிக்கைகள் வெளியிடப்படாதமைக்காக பீடி உற்பத்தியாளர்கள் மீது சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

சூப்பர் மார்க்கெட்டுகளுக்கான மதுபான உரிமங்கள்

மதுவரித் திணைக்களத்தினால் சுப்பர் மார்க்கெட்களுக்கு மதுபான உரிமம் வழங்கப்படுதல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் ஒரு தரப்பாக NATA உள்ளது.

ஒழுங்குவிதிகள்

வரைவு செய்யப்பட்ட புதிய பட சுகாதார எச்சரிக்கை ஒழுங்குவிதிகள் மற்றும் விற்பனை மைய ஒழுங்குவிதிகள் ஆகியவை கௌரவ சுகாதார அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

மூடப்பட்ட பொது இடங்களில் புகை பிடிப்பதற்கு எதிரான நடவடிக்கைகள்

NATA சட்டத்தின் பிரிவு 39 ஐ மீறியதற்காக பல அங்காடித் தொகுதிகள் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் உட்பட பல இடங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மது உற்பத்தியாளர்களின் வர்த்தக குறியீடுகளுடன் கூடிய பலகைகளை வைத்திருப்பதற்கு எதிரான நடவடிக்கைகள்

இந்த ஆண்டில், உரிமம் பெற்ற வளாகங்களில் தங்கள் வர்த்தக குறியீடுகளை காட்சிப்படுத்திய மது உற்பத்தியாளர்கள் மீது NATA நடவடிக்கை எடுத்தது.

12.2. புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனை சான்றிதழ் பாடநெறி (இரண்டாம் மாணவர் தொகுதி)

புகையிலை மற்றும் மதுவைத் தடுப்பதில் சிறப்புப் பயிற்சி பெற்ற அறுபத்தொரு சான்றிதழ்தாரர்கள் வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் வழங்கப்படும் இலவச சேவையை மேலும் வலுப்படுத்தி 1948 க்விட் லைன் அழைப்புச் சேவைக்குப் பங்களிக்கின்றனர். NATA சட்டத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், சுகாதாரக் கல்வி அதிகாரிகள், வரக்காபொல மற்றும் பலாங்கொடை வைத்தியசாலைகளின் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் தேசிய இளைஞர் படையணியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இப்பாடநெறியில் கலந்துகொண்டனர். பயிற்சி பெற்ற ஆலோசனை அதிகாரிகள் நாடு முழுவதும் புகையிலை மற்றும் மதுசார ஒழிப்பு மற்றும் தடுப்பு நிகழ்ச்சிகளை நடத்தியதோடு பயிற்சி பெற்ற ஆலோசனை அதிகாரிகள் பாடநெறியின் மூலம் தாம் பெற்ற அறிவு மற்றும் அனுபவத்தின் ஊடாக 2054 பங்கேற்பாளர்களை விழிப்பூட்டினர்.

புகையிலை மற்றும் மதுசார ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனை சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்த பங்கேற்பாளர்கள் சின்னம் பெற்றனர். இந்த அதிகாரிகள் 1948 தொலைபேசி ஆலோசனைச் சேவையில் தன்னார்வ ஆலோசகர்களாக பணியாற்றினர். சான்றிதழ் வழங்கும் விழா 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி BMICH இல் நடைபெற்றது. சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் பிரதம அதிதியாக தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கலந்து கொண்டார்.

மேலும், ஆலோசனைப் பாடநெறியை டிப்ளோமா நிலைக்கு உயர்த்தக் கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது.







புகைப்படம் 01, 02& 03: சான்றிதழ் வழங்கும் விழாவின் சிறப்பம்சங்கள்

12.3. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆட்படுதல் ஆலோசனை சான்றிதழ் பாடநெறி

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆட்படுதல் ஆலோசனை சான்றிதழ் பாடநெறி 2022 செப்டெம்பர் 25 ஆம் திகதி அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பேராசிரியர் பிரிவில் ஆரம்பமானது. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக மருத்துவம் மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்திற்கும் NATA விற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கைச்சாத்திடப்பட்டது. NATA சட்டத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சுகாதாரப் பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் புகையிலை மற்றும் மதுபானங்களைத் தடுப்பதில் ஆர்வமுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பாடநெறியில் ஈடுபட்டனர். புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆட்படுதல் ஆலோசனை சான்றிதழ் பாடநெறியில் 20 பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர்.

12.4. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனை சான்றிதழ் பாடநெறி

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (KDU) இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்துடன் ஆரம்ப கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, பரிந்துரைக்கப்பட்ட பாடவிதானம் முனுரு செனட்டிற்கு (மூதவைக்கு) அனுப்பப்பட்டது. புகையிலை மற்றும் மதுபானத்தை ஒழித்தல் மற்றும் தடுப்பதில் ஆர்வமுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள் பாடநெறியிலிருந்து பயனடைவார்கள்.

12.5. உலக சுகாதார அமைப்பினால் நடத்தப்பட்ட இலங்கையில் தொலைபேசி ஆலோசனை பற்றிய மெய்நிகர் பயிற்சிச் செயலமர்வு

உலக சுகாதார அமைப்பின் (WHO) நிபுணர்களான பேராசிரியர் ஸ்மிதா தேஷ்பாண்டே, பேராசிரியர் சோனாலி அரோரா மற்றும் டாக்டர் டோங்போ ∴பூ செயலமர்வை நடத்தினர். பங்கேற்பாளர்களில் தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, சமுர்த்தி, வதிவிடப் பொருளாதாரம், நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி ஆகிய இராஜாங்க அமைச்சுகளின் அதிகாரிகள் அத்துடன் புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனை சான்றிதழ் பாடநெறியின் இரண்டாவது தொகுதி மாணவர்களும் அடங்குவர். 2022 ஏப்ரல் 6-8 வரை சும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாடநெறி நடத்தப்பட்டது. பாடநெறியைப் பூர்த்தி செய்த மொத்தம் 65 பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

12.6. புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனை சான்றிதழ் பாடநெறியின் பயிற்றப்பட்ட ஆலோசனை உத்தியோகத்தர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்

2022 நவம்பர் 5 ஆம் திகதி சான்றளிக்கப்பட்ட ஆலோசனை உத்தியோகத்தர்களால் பூர்த்தி செய்யப்பட்ட ஆலோசனைப் பணிகளை மதிப்பாய்வு செய்வதே இக்கூட்டத்தின் நோக்கமாகும். கூட்டத்தில் 29 சான்றளிக்கப்பட்ட ஆலோசனை நிபுணர்கள் கலந்துகொண்டனர்.





புகைப்படம் 04 & 05 :பங்கேற்பாளர்கள் நிகழ்ச்சியின் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்

12.7. 1948 புகையிலை மற்றும் மதுசாரத்திலிருந்து விடுபடுவதற்கான உதவி தொலைபேசி சேவை

அட்டவணை 3: 1948 இற்குக் கிடைத்த அழைப்புகள் பற்றிய விபரங்கள்

மாதம்	மொத்த அழைப்புகள்	ஆலோசனை அழைப்புகள்
சனவரி	2044	384
பெப்ருவரி	1300	218
மார்ச்	1676	239
ஏப்ரல்	1642	280
மே	2019	237
யூன்	1374	330
யூலை	1845	333
ஆகஸ்ட்	1694	486
செப்டெம்பர்	1367	333
அக்டோபர்	1312	335
நவம்பர்	1147	261
டிசம்பர்	1002	230
மொத்த அழைப்புகள்	18,422	3,666

NATA ஆனது மது மற்றும் புகையிலை பயன்படுத்துபவர்களுக்கு அவர்களின் பழக்கங்களை விட்டுவிடுவதற்கான வழிமுறையை வழங்க “1948” க்விட் லைனை அறிமுகப்படுத்தியது. இந்த ஆலோசனைத் திட்டத்தின் குறிக்கோளானது, வாடிக்கையாளர்களுக்கு புகையிலை மற்றும் மதுபானம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை நிறுத்த உதவுவதுடன், இந்தப் பழக்கவழக்கங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு ஆதரவை வழங்குவதும் ஆகும். 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான மாதங்களுக்கான அழைப்புத் தகவல்கள் மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

12.8. இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறு தொழில்முயற்சிப் பிரிவின் கள உத்தியோகத்தர்களுக்கான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்

கம்பஹ, களுத்துறை, கொழும்பு, குருநாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள கள உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களின் பங்குபற்றுதலுடன் இந்த ஆலோசனை நிகழ்ச்சி ஒக்டோபர் 19 மற்றும் டிசம்பர் 05 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.



புகைப்படம் 06 : கொழும்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி




புகைப்படம் 07 ரூ 08 : குருநாகல் மாவட்டத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி

12.9. NATA சட்டத்திற்கான உத்தேச திருத்தங்கள் மீதான மீளாய்வுக் கூட்டம்

உத்தேசிக்கப்பட்ட NATA சட்டத் திருத்தங்கள் மற்றும் NATA துணைக்குழுக்கள் மேற்கொண்டுள்ள பணிகள் குறித்து கலந்துரையாடுவதன் நிமித்தம் ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டம் 2022 டிசம்பர் 27 ஆம் திகதி வாட்டர்ஸ் எட்ஜ், ஆல்பர்ட் ரோஸ் மண்டபத்தில் காலை 9:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை நடைபெற்றது. கூட்டத்தில் NATA வின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் துணைக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். துணைக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் துணைக்குழுக்களின் முன்னேற்றத்தை முன்வைத்து NATA சட்டத் திருத்தங்களுக்கான கருத்துக்களைப் பெற்றனர்.


















புகைப்படம் 9,10,11,12 ,13,14,15 ,16, 17 & 18: புகையிலை மற்றும் மதுசாரம் மீதான உபகுழுவுக்கான வரிவிதிப்பு சூத்திரத்தை உருவாக்குவதற்கான உபகுழு கூட்டங்கள்.

12.10. இலங்கையில் புகையிலை பயிர்ச்செய்கைக்கான மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துவது பற்றிய முன்னோடிக் கருத்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் மதிப்பீடு.

புகையிலை பயிர்ச்செய்கைக்கு மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான முன்னோடி ஆய்வு மொனராகலை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் 2021 இல் நடத்தப்பட்டது. கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக இரண்டு மதிப்பீடுகள் நடத்தப்பட்டன. முதல் மதிப்பீடு 2022 பெப்ருவரி மாதம் (6 மாதங்களுக்குப் பின்னர்) மேற்கொள்ளப்பட்டதோடு இரண்டாவது மதிப்பீடு ஆகஸ்ட் மாதம் (12 மாதங்களுக்குப் பின்னர்) மேற்கொள்ளப்பட்டது.

முதற்கட்ட மதிப்பீட்டில், மொனராகலை மாவட்டத்தில் 38.6% ஆன விவசாயிகள் புகையிலை செய்கையை முற்றாக நிறுத்தியதாகவும், 29.8% ஆன விவசாயிகள் அதனை பகுதியளவில் நிறைவேற்றியதாகவும், 29.8% ஆன பண்ணைகள், நிபுணர்களின் ஆதரவுடன் புகையிலை பயிரிடுவதை நிறுத்தத் தயாராக இருப்பதாகவும் கண்டறியப்பட்டது. மொனராகலை மாவட்டத்தில் புகையிலை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட 58% ஆன காணிகள் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் நிலக்கடலை மற்றும் தட்டைப் பயிறு போன்றவற்றை மாற்றுப் பயிர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

முதல் பகுப்பாய்வின் முடிவுகளின்படி, 67.4% ஆன விவசாயிகள் புகையிலை பயிரிடுவதை முற்றிலுமாக கைவிட்டுள்ளனர் என்பதோடு 10.51% ஆன விவசாயிகள் புகையிலைப் பயிர்ச் செய்கையை பகுதியளவில் நிறுத்தியுள்ளனர். அத்தோடு 6.3% ஆன பண்ணைகள் ஆதரவுடன் புகையிலை பயிரிடுவதை நிறுத்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். அனுராதபுரம் மாவட்டத்தில் புகையிலை பயிரிடப்பட்ட 92% ஆன காணிகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. அனுராதபுரம் மாவட்டத்தில், பெரும்பான்மையான விவசாயிகள் மரக்கறி மற்றும் நெற் செய்கையை மாற்றுப் பயிர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். இரண்டாவது மதிப்பீட்டில், 26% ஆன விவசாயிகள் புகையிலைச் செய்கையை முற்றிலுமாக நிறுத்தியுள்ளதோடு, 23% ஆன விவசாயிகள் புகையிலைச் செய்கையை பகுதிளவில் நிறுத்தியுள்ளனர். அத்தோடு 20% ஆன பண்ணைகளும் 9% ஆன விவசாயிகளும் புதிதாக புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டாவது மதிப்பீட்டில், அனுராதபுரம் மாவட்டத்தில் 67.4% ஆன விவசாயிகள் புகையிலை பயிரிடுவதை முற்றாக நிறுத்தியுள்ளதோடு 10.51% ஆன விவசாயிகள் பகுதியளவு நிறுத்தியுள்ளனர். மேலும் 6.3% பண்ணைகள் ஆதரவுடன் நிறுத்தத் தயாராக உள்ளன.

விவசாயிகளின் கருத்துப்படி, புகையிலைக் கைத்தொழில்துறையிலிருந்து பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரம் கிடைத்தல், ஏனைய பயிர்களுடன் ஒப்பிடும்போது புகையிலைச் செய்கைக்கு குறைந்த அளவு நீர் தேவைப்படுதல், புகையிலை தொழில்துறை தொழில்நுட்ப ரீதியாக புகையிலைச் செய்கைக்கு ஆதரவளித்தல், ஏனைய பயிர்களைப் பொருத்த மட்டில் அரசாங்க ஆதரவு குறைவாக காணப்படுதல், புகையிலை தொழில்துறையானது புகையிலை உற்பத்தியாளர்களுக்கு நிதி ரீதியாக உதவுதல் போன்ற பல்வேறு காரணங்களால் பெரும்பாலான விவசாயிகள் புகையிலை செய்கையை நிறுத்த விரும்பவில்லை.

இக் கருத்திட்டமானது தேசிய அளவில் செயல்படுத்துவதற்கு பயனுள்ளதாகும். புகையிலைக்கு மாற்றுப் பயிராக வலுவான ஆற்றல் உள்ள பயிர்களுக்கு விநியோகச் சங்கிலியை ஏற்படுத்த அரசாங்கம் உதவ வேண்டும். புகையிலைச் செய்கைக்கு மாற்றாகப் பயன்படுத்தக்கூடிய பொருளாதார ரீதியாக இலாபகரமான பயிர்களைக் கண்டறிய அதிக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

12.11. மொனராகலை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் புகையிலை பயிர்ச்செய்கைக்கான மாற்றுப் பயிர்கள் தொடர்பில் விவசாய உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கான செயலமர்வு.

புகையிலைச் செய்கைக்கு மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துவதற்கான முன்னோடிக் கருத்திட்டம் 2021 இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. முதலாவது மதிப்பீட்டில், புகையிலை தொழில்துறையானது புகையிலை விவசாயிகளுக்கு உரம், கடன்கள் மற்றும் புகையிலைச் செய்கைக்கான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் தொடர்ந்து ஆதரவளிப்பது கண்டறியப்பட்டது. விவசாய அதிகாரிகளின் ஆதரவு இல்லாமல், எங்கள் கருத்திட்டத்தின் நிலைத்தன்மை சவாலானது. எனவே, இலக்குப் பகுதிகளில் விவசாய அலுவலர்களுக்கு ஆற்றல் விருத்தி செயலமர்வொன்றை நடத்த துணைக்குழு முடிவு செய்தது. இத்திட்டத்தின் நோக்கங்கள், புகையிலைச் செய்கைக்கான மாற்றுப் பயிர்கள் குறித்த விழிப்புணர்வையும் திறன்களையும் விவசாய அலுவலர்களிடையே மேம்படுத்துதல், விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வலுவான தொடர்பை உருவாக்க அதிகாரிகளின் திறன்கள் மற்றும் மனோபாவங்களை மேம்படுத்துதல் மற்றும் இந்த விவசாய அலுவலர்கள் மூலம் கண்காணிப்புப் பொறிமுறையை உருவாக்குதல் ஆகியவை ஆகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அனுராதபுரம் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள 60 விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் செயலமர்வில் பங்குபற்றினர். இது 2022 ஆகஸ்ட் 24 ஆம் திகதி நடைபெற்றது.





புகைப்படம் 19 & 20 : வளவாளர்கள் தங்கள் சமர்ப்பணங்களை மேற்கொள்ளல்



புகைப்படம் 21 :பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுதல்

12.12. புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு மீதான தேசிய கருத்தரங்கு - 2022

புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு மீதான தேசிய கருத்தரங்கு 2022 டிசம்பர் 2 ஆம் திகதி வாட்டர்ஸ் எட்ஜ், நெலும் மண்டபத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ நிறுவகத்தின் பேராசிரியர் கமல் பெரேரா சிறப்புரையாற்றினார்.

சுகாதார அமைச்சு, கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், ருஹுணு பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், ஜெனரல் சர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் புகையிலை தொழில்துறை அவதான நிலையம் போன்ற சில அரச சார்பற்ற நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 50க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர். புகையிலை மற்றும் மதுசாரப் பயன்பாட்டின் மூலமான பொருளாதார பாதிப்பு, புகையிலை மற்றும் மதுசாரப் பயன்பாட்டின் மூலமான சுகாதார பாதிப்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் புகையிலை மற்றும் மதுசாரக் கட்டுப்பாடு, புகையிலை மற்றும் மதுசாரக் கட்டுப்பாட்டின் சட்ட அம்சங்கள், புகையிலை மற்றும் மதுசாரப் பயன்பாட்டின் மூலமான சமூகத் தாக்கம் மற்றும் புகையிலை மற்றும் மதுசார ஒழிப்பு மற்றும் தடுப்பு போன்ற ஆறு கருப்பொருள்களின் கீழ் இருபத்தி ஒன்று (21) சுருக்கங்கள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

சுருக்கங்கள் வாய்வழி சமர்ப்பணங்கள் மற்றும் சுவரொட்டி விளக்கக்காட்சிகள் என இரண்டு பிரிவுகளின் கீழ் முன்வைக்கப்பட்டன. சுருக்க சமர்ப்பணங்களை மதிப்பீடு செய்யும் இரண்டு குழுக்கள் இருந்தன. பின்வரும் உறுப்பினர்கள் குழு உறுப்பினர்களாக கருத்தரங்கிற்கு பங்களித்தனர்,

- பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ, தலைவர்- NATA
- திருமதி பீ.எம்.எஸ். பண்டார, வர்த்தக அமைச்சின் மேலதிகச் செயலாளர்
- திருமதி ஹிரண்யா பெரேரா, நீதி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர்
- டாக்டர் ஜானகி விதானபத்திரண, பணிப்பாளர்- கொள்கை பகுப்பாய்வு மற்றும் அபிவிருத்தி, சுகாதார அமைச்சு
- டாக்டர். ரங்க பெரேரா, இணை சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
- பேராசிரியர் குசுமலதா லங்காமுல்ல, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், சிங்கள மற்றும் வெகுஜன தொடர்பாடல் துறைத் தலைவர்
- டாக்டர் கௌமதி கருணாகொட, சிரேஸ்ட விரிவுரையாளர், சுதேச மருத்துவ நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம்

இக்கருத்தரங்கில் சிறந்த வாய்மொழி வழங்குநராகவும், சிறந்த சுவரொட்டி வழங்குபவராகவும் முறையே ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இணை சுகாதார விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த டாக்டர் எச்.எம்.பீ.ஹேரத், மற்றும் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையைச் சேர்ந்த திருமதி ருவினி வன்னிநாயக்க ஆகியோர் விருது பெற்றனர்.

















புகைப்படம் 22,23,24,25,26,27,28 & 29:விண்ணப்பதாரர்கள் வாய்மூல சமர்ப்பணங்களை மேற்கொள்ளல்









புகைப்படம் 30, 31, 32 & 33: நிகழ்வின் சிறப்பம்சங்கள்

12.13. NATAவின் நெறிமுறைகள் மீளாய்வுக் குழுவைத் தாபித்தல்

NATAவின் நெறிமுறைகள் மீளாய்வுக் குழு (ERC-NATA) 2021 இன் பிற்பகுதியில் நிறுவப்பட்டது. இது 2022 ஆம் ஆண்டு முதல் செயல்முனைப்புடன் இயங்கியது. ERC-NATA ஆனது மருத்துவம், சமூக விஞ்ஞானம், புள்ளியியல், சட்ட அம்சங்கள், புகையிலை மற்றும் மதுசார ஒழிப்பு மற்றும் தடுப்பு, பொது சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற 24 உறுப்பினர்களைக் கொண்டது. உறுப்பினர் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

- தலைவர் - திரு.ருவன் சத்குமார, வெகுஜன ஊடக அமைச்சின் மேலதிகச் செயலாளர்
- செயலாளர் - திரு.விராஜ் பண்டாரநாயக்க, சட்ட அதிகாரி, NATA
- திருமதி விஜயாணி ரத்நாயக்க, NATA வின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
- டாக்டர் ஜானகி விதான பத்திரண, சுகாதார அமைச்சின் பணிப்பாளர்
- திரு. ஷாக்ய நாணயக்கார, தேசிய அபாயகரமான ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர்
- பேராசிரியர் திலீப் டி சில்வா, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தின் தலைவர் பேராசிரியர்
- பேராசிரியர் கமல் பெரேரா, சுதேச மருத்துவ நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் நதீன ஜயசூரிய, பல் மருத்துவ பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் மனோரி சேனாநாயக்க, குழந்தை மருத்துவத் துறை, மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

- பேராசிரியர் சாந்தனி லியனகே, சமூகவியல் பேராசிரியர், கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் சீ.எஸ்.வீரரத்ன, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் ருஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர்
- பேராசிரியர் குசுமலதா லங்காமுல்ல, சிங்கள மற்றும் வெகுஜன தொடர்பாடல் துறைத் தலைவர், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- டாக்டர். ஆர்.ஹனி.ீபா, குடும்ப மருத்துவத் துறைத் தலைவர், மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- கலாநிதி அமில இசுரு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவம் மற்றும் இணை சுகாதார விஞ்ஞான பீடத்தின் மனநல மருத்துவத் துறையின் தலைவர்
- டாக்டர். மேதானி ஹேவாகம, மனநல மருத்துவர் நிபுணர்
- டாக்டர் என். ஜெயகுமாரன், ஆலோசகர் மருத்துவ புற்றுநோயியல் நிபுணர், அபேக்ஷா மருத்துவமனை, மஹரகம
- டாக்டர் பீ.குமரேந்திரன், சிரேஸ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- டாக்டர் எஸ்.எம். ஹெட்டியாராச்சி, சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை, வெலிசறை
- டாக்டர். ரங்க பெரேரா, ஆலோசகர் புற்றுநோயியல் அறுவை சிகிச்சை நிபுணர்/சிரேஸ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்
- டாக்டர். ஷ்ரீனிகா டி சில்வா வெலியங்க, சமுதாய மருத்துவர்/மருத்துவ புள்ளியியல் நிபுணர்/சிரேஸ்ட விரிவுரையாளர், சமுதாய மருத்துவத் துறை, மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- டாக்டர். நிஷாந்த குமாரசிங்க, நடத்தை விஞ்ஞானி/சிகிச்சை மருத்துவர், சிரேஸ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
- டாக்டர் செவ்வந்தி சுபசிங்க, சிரேஸ்ட விரிவுரையாளர், மருந்தியல் துறை, இணை சுகாதார விஞ்ஞான பீடம், ருஹுணு பல்கலைக்கழகம்
- திருமதி. நதீ அமா ஜெயசேகர, மூத்த கல்வியாளர் (ஓய்வு நிலை), தேசிய கல்வி நிறுவகம்
- திருமதி. கமனி ஹெட்டியாராச்சி, தொழில்முயற்சியாளர்

ERC – NATA இன் முதலாவது கூட்டம் 2022 ஜனவரி 11 ஆம் திகதி வெற்றிகரமாக நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, ERC-NATA இன் வழிகாட்டல்கள் உருவாக்கப்பட்டு ஒரு சிறு புத்தகமாக வெளியிடப்பட்டது (ISBN: 978-955-0645-10-7).

ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கு நெறிமுறை மீளாய்வு வழங்குவதற்காக ERC-NATA ஐ அங்கீகரிக்கப்பட்ட குழுவாக ஏற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு, தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றிடம் NATA கோரிக்கை விடுத்தது. இதன் விளைவாக, சுகாதார அமைச்சு ERC-NATA ஐ அத்தகைய குழுவாக அங்கீகரித்துள்ளது.

12.14. பாடசாலைப் பாடப்புத்தகங்களில் உள்ளடக்குவதற்காக புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு தொடர்பான சுகாதார செய்திகளை உருவாக்குதல்

புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு தொடர்பான சுகாதார செய்திகளை உருவாக்க நிபுணர் குழுவை நியமிப்பதன் மூலம் 2021 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சிதிட்டம் தொடங்கப்பட்டது. அறுபது (60) சுகாதாரச் செய்திகள் உருவாக்கப்பட்டு, அவை 2022 இல் மூன்று பிரதான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. உருவாக்கப்பட்ட சுகாதாரச் செய்திகளை உள்ளக்கி 978-624-5719-43-3 என்ற ISBN இலக்கத்துடன் ஒரு சிறு புத்தகம் வெளியிடப்பட்டது.

பாடசாலை பாடப்புத்தகங்களில் அச் செய்திகளை உள்ளடக்குவதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, மேம்படுத்தப்பட்ட செய்தித் தொகுப்பில் இருந்து சில சுகாதாரச் செய்திகள் தரம் 10 சிங்கள மொழிமூல விஞ்ஞான பாடப்புத்தகத்திலும் தரம் 11 தமிழ் மொழிமூல விஞ்ஞான பாடப்புத்தகத்திலும் உள்ளடக்கப்பட்டன.

12.15. கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 20/2020ஆம் இலக்க சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதை மதிப்பிடுதல்

கல்வி நிறுவனங்களின் வளாகங்களை புகையிலை உற்பத்திப் பொருட்கள், மது மற்றும் பிற போதைப்பொருள்களின் பயன்பாடு, விளம்பரம் மற்றும் வர்த்தகம் இல்லாத வலயங்களாக மாற்றுவது தொடர்பாக 2020 ஜூலை 29 ஆம் திகதி கல்வி அமைச்சினால் 20/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை (NATA) இந்த சுற்றறிக்கையில் ஒரு முக்கிய பங்குதாரராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, கல்வி நிறுவனங்கள் இந்த சுற்றறிக்கையை செயல்படுத்தும் அளவை மதிப்பிடுவதற்காக மதிப்பீடொன்றை நடத்த யுவுயு முடிவு செய்தது. மதிப்பீட்டு வினாக்கொத்து கூகுள் படிவமாக உருவாக்கப்பட்டு மூன்று பிரதான மொழிகளுக்கு மாற்றப்பட்டது. NATA சார்பாக கல்வி நிறுவனங்களைத் தொடர்புகொண்டு மதிப்பீட்டை நடத்துவதற்காக உருவாக்கப்பட்ட கூகுள் படிவங்கள் கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

12.16. புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனைச் சான்றிதழ் பாடநெறியை டிப்ளோமோ நிலைக்கு தரமுயர்த்துதல்.

இது தொடர்பாக தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன், புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு பற்றிய ஆலோசனைச் சான்றிதழ் பாடநெறியை டிப்ளோமோ நிலைக்கு தரமுயர்த்துவதற்கான முன்மொழிவு NIE க்கு சமர்ப்பிக்கப்பட்டது.

12.17. உலகளாவிய வயது வந்தோர் புகையிலை மீளாய்வு (GATS)- -2020

GATS 2020 அறிக்கை NATA தரப்பால் இறுதி செய்யப்பட்டு, உலக சுகாதார அமைப்பின் மூலம் நோய் கட்டுப்பாட்டு மையத்திற்கு (CDC) அனுமதி பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

12.18. தரவு முதல் கொள்கை வரை தலைப்பிலான செயலமர்வு

ப்ளூம்பெர்க் பரோபகாரிகள், சுகாதார முன்னெடுப்புக்கான தரவுகள் ஆகியவற்றின் ஆதரவுடன் சுகாதார அமைச்சினால் தரவு முதல் கொள்கை வரை செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. தேசிய புகையிலை கட்டுப்பாட்டு கொள்கையை உருவாக்குவது இந்த செயலமர்வின் நோக்கங்களில் ஒன்றாக இருப்பதால், இந்த செயலமர்வில் யுவுயு வின் இரண்டு அதிகாரிகளை பங்கேற்குமாறு சுகாதார அமைச்சின் கொள்கை பகுப்பாய்வு மற்றும் அபிவிருத்திப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

2022 நவம்பர் 28 முதல் 2022 டிசம்பர் 9 ஆம் திகதி வரை கொழும்பு 02, ஹில்டன் கொழும்பு ரெசிடென்சிஸில் செயலமர்வு நடைபெற்றது. யுவுயு வின் இரண்டு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் (திருமதி ஹன்சமாலி விக்ரமசூரிய மற்றும் திரு. பிம்சர மல்'ான்) NATA ஐப் பிரதிநிதித்துவப்படுத்தி செயலமர்வில் கலந்து கொண்டனர்.

12.19. புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை இற்றைப்படுத்துதல் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தீவிர உள்நோயாளிகள் பிரிவு/ புனர்வாழ்வு நிலையம்/செயலில் உள்ள பொது மற்றும் உடற்தகுதி பிரிவு)

2022 ஜூன் 17 ஆம் திகதி, சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக முதலாவது கூட்டம் நடைபெற்றதோடு பணிப்பாளர் டாக்டர் ரோஹண ரத்நாயக்க (மனநல சுகாதாரப் பணிப்பாளர், சுகாதார அமைச்சு) மதுசார புனர்வாழ்வு வசதிகள் பற்றிய தகவல்களை வழங்கினார். உளவியலாளர்கள் கல்லூரியின் உறுப்பினர்கள், பேராசிரியர் நாரத வர்ணசூரிய, (சுகாதார அமைச்சின் புகையிலை, மதுபானம் மற்றும் சட்டவிரோத போதைப்பொருட்கள் தொடர்பான நிபுணர் குழுவின் தலைவர்) மற்றும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் (ADIC) பிரதிநிதிகள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

12.20. ஊடக செயற்பாடுகள்

பின்வரும் பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் NATA YouTube அலைவரிசை, வானொலி நிலையங்கள் மற்றும் தொலைக்காட்சி வலையமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன:

- 2022 ஜனவரி 5 ஆம் திகதி V- FM இல் கதா மினிஸ்ரி வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 ஜனவரி 6 ஆம் திகதி ஆயுபோவன் ஸ்ரீ லங்கா தொலைக்காட்சி நிகழ்ச்சி சுவர்ணவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 ஜனவரி 8 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- புகையிலைச் செய்கைக்கான மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துவது குறித்து தலைவர் மற்றும் NATA ஊழியர்களால் NATA YouTube , அலைவரிசை மூலம் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன -2022 ஜன 13.
- 2022 பிப்ருவரி 2 ஆம் திகதி V-FM, இல் கதா மினிஸ்ரி வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 பிப்ருவரி 01 ஆம் திகதி ஆயுபோவன் ஸ்ரீ லங்கா தொலைக்காட்சி நிகழ்ச்சி சுவர்ணவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 பிப்ருவரி 15 ஆம் திகதி V-FM, இல் கதா மினிஸ்ரி வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 பிப்ருவரி 4 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 பிப்ருவரி 04 ஆம் திகதி சியத்த டிவியில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி
- 2022 சனவரி 08 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- புகையிலை மற்றும் மதுசார துஸ்பிரயோகத்திற்கும் 1948 மூலமான விபரங்களுக்கும் தொலைபேசி மூலமான ஆலோசனை எவ்வாறு உதவுகின்றது என்பது குறித்து தலைவர் மற்றும் NATA ஊழியர்களால் NATA YouTube , அலைவரிசை மூலம் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன - 2022 மார்ச் 12
- 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி ஆயுபோவன் ஸ்ரீ லங்கா தொலைக்காட்சி நிகழ்ச்சி சுவர்ணவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி சுபாரதய வானொலி நிகழ்ச்சி இலங்கை வானொலியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 மே 31 ஆம் திகதி ஆயுபோவன் ஸ்ரீ லங்கா தொலைக்காட்சி நிகழ்ச்சி சுவர்ணவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 மே 27 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 மே 28 ஆம் திகதி ஆயுபோவன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ரூபவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 மே 30 ஆம் திகதி 7 வெனி பெய தொலைக்காட்சி நிகழ்ச்சி ITN இல் ஒளிப்பப்பட்டது.
- உலக புகையிலை எதிர்ப்பு தினம் - 2022 குறித்து தலைவர் மற்றும் NATA ஊழியர்களால் NATA YouTube , அலைவரிசை மூலம் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன - தலைவரின் செய்தி 2022 மே31
- இளங்கலை ஊடக மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுபானம் தடுப்பு பற்றிய பாடவிதானம் குறித்து தலைவர் மற்றும் யேவுயு ஊழியர்களால் யேவுயு லுழரவுரடிந இ அலைவரிசை மூலம் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன - 2022 மே 15
- 2022 யூன் 03 ஆம் திகதி ஆயுபோவன் ஸ்ரீ லங்கா தொலைக்காட்சி நிகழ்ச்சி சுவர்ணவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 யூன் 02 ஆம் திகதி ஆயுபோவன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ரூபவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 யூன் 04 ஆம் திகதி சித்திஜய தொலைக்காட்சி நிகழ்ச்சி சிரச(TV1)இல் ஒளிப்பப்பட்டது.
- 2022 யூன் 06 ஆம் திகதி ஆயுபோவன் ஸ்ரீ லங்கா தொலைக்காட்சி நிகழ்ச்சி சுவர்ணவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 யூன் 06 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 யூன் 10 ஆம் திகதி சியத்த டிவியில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி
- 2022 யூன் 13 ஆம் திகதி மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி சிரச டிவியில் ஒளிப்பப்பட்டது.

- 2022 யூன் 14 ஆம் திகதி ஆயுபோவன் ஸ்ரீ லங்கா தொலைக்காட்சி நிகழ்ச்சி சுவர்ணவாஹினியில் ஒளிப்பப்பட்டது.
- 2022 யூன் 24 ஆம் திகதி V-FM, இல் கதா மினிஸ்ரி வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 ஜூலை 21 ஆம் திகதி ஆயுபோவன் ஸ்ரீ லங்கா சுவர்ணவாஹினி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்றல்.
- 2022 ஜூலை 22 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- மது மற்றும் புகையிலையால் மனித உடலில் ஏற்படும் தீங்கான விளைவுகள் குறித்து குறித்து தலைவர் மற்றும் NATA ஊழியர்களால் NATA YouTube , அலைவரிசை மூலம் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன -2022 ஆகஸ்ட் 22
- இலங்கையில் வாய் புற்றுநோய்க்கான முக்கிய காரணம் வெற்றிலை மற்றும் புகையிலை என்பது குறித்து தலைவர் மற்றும் யேவுயு ஊழியர்களால் NATA YouTube , அலைவரிசை மூலம் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன - பேராசிரியர் நதீன ஜயசூரிய- அக்டோபர் 5 மற்றும் புகையிலை பாவனையால் ஏற்படும் வாய் புற்றுநோய் - அக்டோபர் 14
- 2022 அக்டோபர் 08 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 அக்டோபர் 10 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 அக்டோபர் 14 ஆம் திகதி சியத்த டிவியில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி
- 2022 நவம்பர் 01 ஆம் திகதி V-FM, இல் ஒளிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சி
- 2022 நவம்பர் 04 ஆம் திகதி லக்ஹண்ட வானொலியில், வெடில்ல வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 நவம்பர் 02 ஆம் திகதி அக்'ரய டிவியில் ஒளிபரப்பப்பட்ட டிவி நிகழ்ச்சி
- 2022 நவம்பர் 01 ஆம் திகதி V-FM, இல் கதா மினிஸ்ரி வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- 2022 நவம்பர் 03 ஆம் திகதி சியத்த டிவியில் தொலைக்காட்சி நிகழ்ச்சி

NATA வின் அதிகாரப்பூர்வ Facebook பக்கத்தில் 3727 பின்தொடர்பவர்களும் NATA YouTube அலைவரிசையில் 167 சந்தாதாரர்களும் உள்ளதோடு யேவுயு இன்ஸ்டாகிராம் விவரக்குறிப்பில் 26 பின்தொடர்பவர்கள் உள்ளனர். அதிகாரப்பூர்வ பேஸ்புக் ரீச் படி, NATA Facebook பக்கம் 2022 இல் மாதத்திற்கு 676,334 முதல் 150,000 பயனர்களை அடைந்துள்ளது.

அதுமட்டுமின்றி, புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தணிக்க NATA எடுத்த நடவடிக்கைகள் குறித்து 185 செய்தித்தாள் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

12.21. திரைப்பட மீள்பார்வை அறிக்கை சுருக்கம்

2020 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஒளிபரப்பாகும் திரைப்படங்களை NATA மதிப்பீடு செய்து பரிந்துரைத்து வருகிறது.

அட்டவணை 4 :திரைப்பட மீள்பார்வை பற்றிய கண்ணோட்டம்

மொழி	மீள்பார்வை செய்யப்பட்ட திரைப்படங்கள்
சிங்களம்	17
தமிழ்	03
ஆங்கிலம்	02
மொத்தம்	22

12.22. ஊடக விருது வழங்கும் விழா- 2022

நாட்டில் புகையிலை மற்றும் மதுபானங்களைத் தடுப்பதில் இலங்கை ஊடகவியலாளர்களின் பங்களிப்பைப் பாராட்டும் நோக்கத்துடன் யுவுயு ஆனது அவர்களுக்கான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. நிகழ்ச்சி 2022 டிசம்பர் 02 ஆம் திகதி மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை பத்தரமுல்லை "வாட்டர்ஸ் எட்ஜ்" இல் நடைபெற்றது.

டிஜிட்டல் மீடியா பிரிவில், எட்டு டிஜிட்டல் ஊடக அலைவரிசைகளுக்கு (சியத்த டிவி, சிரச டிவி, டிவி தெரண, ரூபவாஹினி, ஸ்வர்ணவாஹினி, ஹிரு டிவி, ஐடிஎன், அரசாங்க தகவல் திணைக்களம்) விருதுகள் வழங்கப்பட்டதோடு சிரச டிவியில் ஒளிபரப்பப்பட்ட "சித்திஜய" நிகழ்ச்சிக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது. அச்சு ஊடகப் பிரிவில், மூன்று ஊடகவியலாளர்களுக்கு (த மார்னிங் ஆங்கில நாளிதழுக்காக திருமதி. வெனஸ்ஸா அந்தோனி, தினமின செய்தித்தாளுக்காக திரு. இந்திக பொல்கொட்டுவ மற்றும் வீரகேசரி தமிழ் இ செய்தித்தாளுக்காக திரு. ஆர். ராம்குமார்) விருதுகள் வழங்கப்பட்டன.

மூன்று வானொலி அலைவரிசைகளுக்கு (SLBC, V Fm மற்றும் லக்ஹண்ட வானொலி) விருதுகள் வழங்கப்பட்டதுடன் Lak Fm க்கு அவர்களின் "வெடில்ல நிகழ்ச்சிக்காக" சிறப்பு விருது வழங்கப்பட்டது. குறிப்பாக சமூக ஊடக வலையமைப்புகள் புகையிலை மற்றும் மதுபானக் கட்டுப்பாட்டுக்கான அவர்களின் பங்களிப்பின் நிமித்தம் இந்த ஆண்டில் பாராட்டப்பட்டன. அவ்வகையில் தசத லங்கா முகநூல் பக்கம் இது தொடர்பில் பாராட்டப்பட்டது. சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.













புகைப்படம் 34,35,36,37,38 & 39 : நிகழ்வின் சிறப்பம்சங்கள்

12.23. V NATA ஊடக மீறல் மொபைல் பயன்பாடு

NATA ஆனது "V NATA Media App" என்ற மொபைல் செயலியை உருவாக்கியுள்ளது. ஊடகங்கள் மேற்கொள்ளும் NATA சட்ட மீறல்களை பொது மக்கள் இந்த பயன்பாட்டின் (செயலியின்) மூலம் யூவுயு க்கு தெரிவிக்கலாம். டிஜிட்டல் ஊடகங்களைப் பயன்படுத்தி புகையிலை மற்றும் மதுசார உற்பத்திகளின் முறைசாரா விளம்பரங்களை நிறுத்துவதே இந்த மொபைல் பயன்பாட்டை அறிமுகப்படுத்துவதன் முதன்மை நோக்கமாகும்.

NATA ஆனது இந்த மொபைல் பயன்பாட்டின் மூலம் பதிவாகும் ஊடக மீறல்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, அனைத்து தொடர்பாடல் ஊடகங்கள் மூலமாகவும் இடம்பெறுகின்ற சட்டவிரோத புகையிலை மற்றும் மதுபான விளம்பரங்கள் குறித்த பொது மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. 2022 ஜனவரி முதல் நவம்பர் வரை V NATA ஊடகப் பயன்பாடு மூலம் 200க்கும் மேற்பட்ட பொது மக்களின் முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன.

2022 டிசம்பர் 27 நிலவரப்படி பொதுமக்களிடமிருந்து மொத்தம் 199 முறைப்பாடுகள் செயலி மூலம் பதிவாகியுள்ளன. இந்த 199 முறைப்பாடுகளில் 148 சமூக ஊடகங்களினால் மேற்கொள்ளப்பட்ட மீறல்களாகவும், 09 செய்தித்தாள்கள் மீறல்களாகவும், 08 தொலைக்காட்சி அலைவரிசைகளின் மீறல்களாகவும், 19 NATA சட்டத்தை மீறி வெளியிடப்பட்ட புகைப்படங்களாகவும், 15 முறைசாரா புகையிலை மற்றும் மதுபான விளம்பரங்களாகவும் அமைந்திருந்தன.

மேற்கூறிய தரவுகளின்படி, சமூக ஊடகங்கள் தொடர்பில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதன்படி, பதிவான அனைத்து முறைப்பாடுகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பொலீஸ் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் என்டிடிசிபி ஆகியவையும் சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

12.24. VNATA அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் மொபைல் பயன்பாடு

NATA சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளுக்கென (பொது சுகாதாரப் பரிசோதகர்கள், மதுவரி அதிகாரிகள், உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்கள் மற்றும் பொலீஸ் அதிகாரிகள்) NATA இந்த மொபைல் பயன்பாட்டை அறிமுகப்படுத்தியது. NATA மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இடையேயான தொடர்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இந்த செயலி 2021 இல் தொடங்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளை இந்த செயலின் ஊடாக அவ்வப்போது கண்டறிந்து மதிப்பீடு செய்வதை NATA நோக்கமாகக் கொண்டுள்ளது. மொபைல் பயன்பாட்டின் மூலம் மூலம் பெறப்பட்ட தகவல்களின் விவரங்கள் பின்வருமாறு.

அட்டவணை 5: VNATA பயன்பாட்டிற்கான பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை

பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் வகை	எண்ணிக்கை
பொலீஸ் உத்தியோகத்தர்கள்	12
மதுவரி உத்தியோகத்தர்கள்	10
பொது சுகாதாரப் பரிசோதகர்கள்	188
உணவு மற்றும் மருத்துப் பரிசோதகர்கள்	03
மொத்தம்	213

அட்டவணை 6 பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் ஒவ்வொரு வகையிலிருந்தும் கிடைத்த மொத்த அறிக்கைகளின் எண்ணிக்கை

பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் வகை	எண்ணிக்கை
பொலீஸ் உத்தியோகத்தர்கள்	01
மதுவரி உத்தியோகத்தர்கள்	01
பொது சுகாதாரப் பரிசோதகர்கள்	30
உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர்	0
மொத்தம்	32

அட்டவணை 7 : அதிகார சபை சட்டத்தின் ஒவ்வொரு பிரிவிற்குமாக கிடைத்த விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை

பிரிவின் இலக்கம்	பெறப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை
பிரிவு 31	08
பிரிவு 32	0
பிரிவு 33	01
பிரிவு 34	01
பிரிவு 35	0
பிரிவு 36	0
பிரிவு 37	0
பிரிவு 38	0
பிரிவு 39	22
பிரிவு 41	0
மொத்தம்	32

12.25. சர்வதேச மாநாடுகள்

NATA இன் தலைவர் உலக சுகாதார அமைப்பின் மையப் புள்ளியாக 2022 பிப்ரவரி 3 ஆம் திகதி தரப்புகளின் மாநாடு (COP) மற்றும் தரப்புகளின் உறுப்பினர் (MOP) கூட்டங்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியதோடு COP9 மற்றும் MOP2 தேர்ந்தெடுக்கப்பட்ட பணியகங்களின் இரண்டாவது கூட்டுக் கூட்டத்திற்கும் பங்களித்தார். இது 2022 நவம்பர் 21 முதல் 25 வரை நடைபெற்றது.

12.26. பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலையற்ற வலயங்களை மீண்டும் செயல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.

ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒன்பது மாகாண செயலமர்வுகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் முக்கியமாக இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டன. முதல் பகுதி புகையிலை இல்லாத வலயங்களை ஆரம்பிப்பதற்கான விழிப்புணர்வையும் ஊக்கத்தையும் ஏற்படுத்துவது மற்றும் புகையிலை இல்லாத வலயங்களைத் திட்டமிடுவது ஆகும். இரண்டாவது பகுதி NATA சட்டம் இயற்றப்படுதல் என்பதோடு NATA சட்ட மீறல்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எவ்வாறு தொடர்வது என்பது பற்றிய பயிற்சி மற்றும் புதிதாக தொடங்கப்பட்ட அறிக்கையிடல் அமைப்பு பற்றிய பயிற்சி ஆகியவற்றின் மீது அது முக்கியமாக கவனம் செலுத்தியது.

சட்டவாக்கப் பயிற்சிக்காக, NATA சட்டத்தின் மீறல்களுக்கு எதிரான சட்டவாக்க நடைமுறையை பயிற்சி செய்ய NATA சோதனைகளை நடத்தியது. அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட V-NATA மொபைல் பயன்பாடு (ஒரு கண்காணிப்பு முறைமையாக) அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலதிகலாக, NATA அனுராதபுரத்தையும் மிஹிந்தலையையும் புகையிலையற்ற வலயங்களாக பெயரிட்டுள்ளது. முக்கியமாக அனுராதபுரத்தில் உள்ள புனிதத் தலங்களுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட பொசன் போயா கொண்டாட்டத்தில் இது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. புகையிலை இல்லாத வலயங்களின் துவக்க செயல்முறைக்கு முக்கியமான IEC பொருட்கள் ஆர்வமுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளிடையே விநியோகிக்கப்பட்டன. நிகழ்ச்சிகள் பின்வருமாறு நடத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 8 : புகையிலை இல்லாத வலயங்களை மீண்டும் செயல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்கள்

திகதி மற்றும் நேரம	நிகழ்ச்சி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை
2022 ஏப்ரல் 20	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த வடமேல் மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி)	34
2022 ஏப்ரல் 20	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த மத்திய மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி)	33
2022 மே 03	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த வட மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி)	39
2022 மே 04	NATA சட்ட அமுலாக்கத்திற்கான பயிற்சி மற்றும் VNATA பயன்பாடுகளை அறிமுகப்படுத்துதல் - வட மாகாணம்	39
2022 மே 04	NATA சட்ட அமுலாக்கத்திற்கான பயிற்சி மற்றும் VNATA பயன்பாடுகளை அறிமுகப்படுத்துதல் - வட மத்திய மாகாணம்	31
2022 மே 05	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த வட மத்திய மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி)	39
2022 மே 17	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த தென் மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி)	45
2022 மே 18	NATA சட்ட அமுலாக்கத்திற்கான பயிற்சி மற்றும் VNATA பயன்பாடுகளை அறிமுகப்படுத்துதல் (அறிவு மேம்பாட்டு அமர்வு தொடர்ச்சி) - தென் மாகாணம்	56
2022 மே 22	NATA சட்ட அமுலாக்கத்திற்கான பயிற்சி மற்றும் VNATA பயன்பாடுகளை அறிமுகப்படுத்துதல் - கிழக்கு மாகாணம்	61
2022 மே 23	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த கிழக்கு மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி)	60
25வா ஆயல 2022	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த சப்ரகமுவ மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி) மற்றும் சட்ட அமுலாக்க அமர்வு	46
2022 மே 26	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த ஊவா மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி) மற்றும் சட்ட அமுலாக்க அமர்வு	56
2022 மே 30	பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான புகையிலை இல்லாத வலயங்களை நிறுவுவது குறித்த மேல் மாகாண அறிவு மேம்பாட்டு அமர்வு (பயிற்சி) மற்றும் சட்ட அமுலாக்க அமர்வு	59
2022 யூன் 09	குறிப்பாக புனித இடங்களைச் சுற்றி புகையிலை இல்லாத வலயங்களை ஆரம்பிக்க பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள அனைத்து பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்குமான தொழில்நுட்ப அமர்வு	50
2022 யூன் 10	அனுராதபுரம் மற்றும் மிஹிந்தலை புனித தலங்களில் புகையிலை இல்லாத வலயங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு	72



புகைப்படம் 40: குருநாகலில் பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி







புகைப்படம் 41,42 & 43: மாத்தறையில் நடைபெற்ற நிகழ்ச்சி

12.27. புகையிலை இல்லாத வலயங்களை உருவாக்குவதில் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் பங்களிப்பைப் பாராட்டுதல்.

புகையிலை இல்லாத வலயங்களை (TFZ) மீண்டும் செயல்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பின் நிதியுதவிக் கருத்திட்டத்தை NATA தொடங்கியது. ஆறு மாதங்களுக்குப் பின்னர் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தை NATA மதிப்பீடு செய்ததுடன் நாடு முழுவதும் கிட்டத்தட்ட 230 வுகுணுகள் நிறுவப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. பின்னர் NATA ஆனது TFZ களை உருவாக்குவதில் ஈடுபட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்களைப் பாராட்டுவதற்காக ஒரு ஆய்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது. மேலும், TFZ களின் துவக்கம் தொடர்பான கதைப்புத்தகத்தை NATA விற்கு வெளியிட முடிந்தது. இந்த நிகழ்வு 2022 டிசம்பர் 30 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்ள ஜாஸ்மின் மண்டபத்தில் நடைபெற்றது.









புகைப்படம் 44,45, 46 & 47 : நிகழ்வில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு விருதுகள் வழங்கப்படுதல்

12.28. மேல் மாகாணத்தில் சுகாதார தொழில்வாண்மையாளர்களை விழிப்பூட்டல்

புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பதில் முக்கியமான ஒரு குழுவினர் மருத்துவ தொழில்வாண்மையாளர்கள் ஆவர். பொருத்தமான புகையிலை வரிவிதிப்பு சூத்திரம் மற்றும் புகையிலை மற்றும் மதுவைத் தடுப்பது மற்றும் நிறுத்துவதன் முக்கியத்துவம் குறித்த சுகாதார நிபுணர்களின் அறிவை அதிகரிப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். இந்நிகழ்வு செப்டம்பர் 28 ஆம் திகதி கம்பஹ மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சியில் மருத்துவர்கள், தாதி அலுவலர்கள், PHMகள் மற்றும் PHIக்கள் உட்பட 80 சுகாதார தொழில்வாண்மையாளர்கள் பங்கேற்றனர்.







புகைப்படம் 48, 49 & 50 :சுகாதார தொழில்வாண்மையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்

12.29. மருத்துவ இளங்கலை பட்டதாரிகளுக்கு புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு பற்றிய பாடவிதானத்தை உருவாக்குதல்

மருத்துவ இளங்கலை மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுசாரம் தடுப்பு குறித்த பாடவிதானத்தை உருவாக்குதல் பற்றிய துணைக்குழு NATA விற்கான பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் 2021 இல் நியமிக்கப்பட்டது. இந்த துணைக் குழுவின் முக்கிய நோக்கம், தற்போதுள்ள மருத்துவ இளங்கலை நிகழ்ச்சித்திட்டங்களுக்குள் புகையிலை, மது மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கான பயிற்சியை நெறிப்படுத்துவதும் வலுப்படுத்துவதும் ஆகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) ஒப்புதலுடன் பாடவிதானத்தை குழு வெற்றிகரமாக உருவாக்கியது. அதன்படி உருவாக்கப்பட்ட பாடவிதானத்தை செயல்படுத்துவது தொடர்பாக 2022 பெப்ரவரியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் NATA சந்திப்பொன்றை நடத்தியது. மேலும், உருவாக்கப்பட்ட பாடவிதானத்தை செயல்படுத்துவது தொடர்பாக பல்கலைக்கழகங்களில் இருந்து NATA நேர்மறையான கருத்துக்களைப் பெற்றதுடன் உருவாக்கப்பட்ட பாடவிதானத்திற்காக மெய்நிகர் கற்றல் வலைவாசல் / இணையவழி பாடநெறியை உருவாக்க NATA முடிவு செய்தது. எனவே, 2022 ஜூன் மாதம் நடைபெற்ற 4வது துணைக் குழுக் கூட்டத்தில், உருவாக்கப்பட்ட பாடவிதானத்திற்கான மெய்நிகர் கற்றல் வலைவாசல் / இணையவழி பாடநெறியை உருவாக்கும் நோக்கத்துடன் தலைவர் உட்பட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட தனிக் குழுவை நியமிக்க துணைக் குழு முடிவு செய்தது.

மேலும், மெய்நிகர் கற்றல் வலைவாசல் / இணையவழி பாடநெறியின் உருவாக்கம் தொடர்பாக, 2022 செப்டம்பர் மாதம், யுவுயு ஆனது புகையிலை எதிர்ப்பு மையத்துடன் (CCT) கூட்டமொன்றை நடத்தியது. முதலாவது கூட்டத்திற்கமைவாக, மெய்நிகர் கற்றல் வலைவாசல் / இணையவழி பாடநெறியை மேம்படுத்துவதற்கான வரவு செலவு மதிப்பீட்டைப் பற்றி கலந்துரையாட, யுவுயு ஆனது CCT உடன் இரண்டாவது கூட்டத்தை 2022 அக்டோபர் மாதம் நடத்தியது.

இதன் விளைவாக, NATA ஆனது இந்த உருவாக்கப்பட்ட பாடவிதானத்தை இலங்கையின் சுதேச மருத்துவ பீடங்களுடன் ஒருங்கிணைக்க முடிவு செய்தது. எனவே, 2022 நவம்பர் மாத பிற்பகுதியில் நான்கு சுதேச மருத்துவ பீடங்களுடன் NATA ஒரு கூட்டத்தை நடத்தியது. அவையாவன,

- சுதேச மருத்துவ நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- சித்த மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- சித்த மருத்துவப் பரிவு, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
- கம்பஹ விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

கூட்டத்தின் கலந்துரையாடலின் படி, சுதேச மருத்துவ பீடங்களில் இருந்து நான்கு உறுப்பினர்களை துணைக்குழுவிற்கு நியமிக்க NATA முடிவு செய்தது.

12.30. மாத்தறை மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

NATA ஆனது புகையிலை மற்றும் மதுபான பாவனையை கவர்ந்திழுக்காமல் ஊடக நிகழ்ச்சிகளை நடத்துவது தொடர்பாக வெகுஜன ஊடக அமைச்சுடன் இணைந்த மாத்தறை மாவட்டத்தில் உள்ள பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு ஒரு விழிப்பூட்டல் நிகழ்ச்சியை நடத்தியது. இந்த நிகழ்ச்சி 2022 டிசம்பர் 15 ஆம் திகதி மாத்தறை நுபேவில் உள்ள நோய்த்தடுப்பு மருத்துவ நிறுவனத்தில் நடைபெற்றது. NATAவினால் ஆரம்பிக்கப்பட்ட அமைச்சுப் பயிற்சித் திட்டங்களின் ஒரு பகுதியாக இது மேற்கொள்ளப்பட்டதுடன், மாத்தறை மாவட்டச் செயலாளர் சட்டத்தரணி வை. விக்கிரமசிறி மற்றும் NATA இன் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





புகைப்படம் 51 & 52 :நிகழ்வின் சிறப்பம்சங்கள்

12.31. பல்கலைக்கழக மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுசார தடுப்பு பற்றிய ஆற்றல் விருத்தி பயிற்சி (ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்)

2022 நவம்பர் 8 ஆம் திகதி புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து, KDU மருத்துவமனையின் கேட்போர் கூடத்தில், இணை சுகாதார விஞ்ஞான பீடத்தில் உள்ள மாணவர்களுக்கான அறிவை மேம்படுத்தும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்வில் NATA இன் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ மற்றும் KDU வின் இணை சுகாதார விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி டாக்டர் ரங்க பெரேரா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.







புகைப்படம் 53, 54 & 55:பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்சி

12.32. பல்கலைக்கழக மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுசார தடுப்பு பற்றிய ஆற்றல் விருத்தி பயிற்சி (உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம்)

நாட்டில் மது மற்றும் புகையிலை கட்டுப்பாட்டை பாதிக்கும் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ நிறுவகம் (IIM), 2022 நவம்பர் 3 ஆம் திகதி ஒரு அமர்வை நடத்தியது. பேராசிரியர் கமல் பெரேரா IIMI பிரதிநிதித்துவப்படுத்தியதோடு NATA இன் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார்.







புகைப்படம் 56, 57 & 58: பல்கலைக்கழக மாணவர்களுக்கான புகையிலை மற்றும் மதுசார தடுப்பு பற்றிய ஆற்றல் விருத்தி பயிற்சி (உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம்)

12.33. கிராம உத்தியோகத்தர்களை வலுவூட்டுவதன் ஊடாக மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் தரை மட்ட புகையிலை மற்றும் மதுசார தடுப்பு செயற்பாடுகளை வலுப்படுத்துதல்

NATA ஆனது, 2022 டிசம்பர் 12 ஆம் திகதி, மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கு புகையிலை மற்றும் மதுசாரத் தடுப்பு தொடர்பான சமூக ஈடுபாட்டை அதிகரிப்பது பற்றிய பயிற்சியை, மாத்தறை, நுபே, நோய்த்தடுப்பு மருத்துவ நிறுவனத்தில், அமைச்சுப் பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தியது. இந்நிகழ்வில் மாத்தறை பிரதேச செயலாளர் திருமதி கௌசல்யா குமாரி மற்றும் NATA இன் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





புகைப்படம் 59 & 60:மாத்தறை பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி

12.34. NATA சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி

NATA சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிபுணத்துவம் குறித்த அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி 2022 செப்டம்பர் 11 ஆம் திகதி, பத்தரமுல்லை, வாட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்றது. ஐம்பது பொது சுகாதாரப் பரிசோதகர்கள், இருபது பொலிஸ் உத்தியோகத்தர்கள், இருபது மதுவரி உத்தியோகத்தர்கள் மற்றும் ஐந்து உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். கௌரவ நீதவான் திரு. மஞ்சுள கருணாரத்ன, NATA இன் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷவுடன் நிகழ்வில் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சிகான நிதி அனுசரணையை உலக சுகாதார அமைப்பு (WHO) வழங்கியது.

12.35. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைந்து நடத்தப்பட்ட பேருந்து நடத்துனர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கான செயலமர்வு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் 2022 மார்ச் முதல் செப்டம்பர் வரை சுமார் 700 மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து நடத்துனர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை NATA நடத்தியது. புகையிலை மற்றும் மதுசார உற்பத்திகளை ஒழிப்பது மற்றும் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும் NATA ஆனது புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பாக மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்து ஊழியர்களிடையே உள்ள அறிவு, மனோபாவம் மற்றும் நடைமுறைகளை அடையாளம் காண ஆய்வுகளை நடத்தியது.

2022 செப்டம்பர் 13 ஆம் திகதி புகையிலை மற்றும் மதுசாரத்தை ஒழிப்பது மற்றும் தடுப்பது குறித்த 1948 குவிட் லைன் ஆலோசனைச் சேவை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பாஸ்டியன் வீதியில் உள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆதரவுடன் மாகாணங்களுக்கு இடையேயான தனியார் பேருந்துகளில் NATA இன் 1948 உளவியல் ஆலோசனை தொலைபேசி இலக்கம் அடங்கிய ஸ்டிக்கர்களை காட்சிப்படுத்த அதிகார சபைக்கு முடிந்தது.





புகைப்படம் 61 & 62:பேருந்துகளில் 1948 க்விட்லைன் ஸ்டிக்கர்களை ஒட்டுதல்





புகைப்படம் 63 & 64: தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆதரவுடன் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி

12.36. புகையிலை மற்றும் மதுசாரம் ஒழிப்பு மற்றும் தடுப்பு தொடர்பான செயலமர்வு - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

புகையிலை மற்றும் மதுசாரத்தை ஒழிப்பது மற்றும் தடுப்பது தொடர்பான செயலமர்வு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளுக்காக யுவுயுவினால் நடத்தப்பட்டுள்ளது. இந்த பயிலரங்கில் சுமார் 25 பேர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக்கு வளவாளர்களாக திரு.பிமல் ராஜகருணா (சனச அபிவிருத்தி வங்கியின் சிரேஸ்ட முகாமையாளர்) மற்றும் சட்டத்தரணி திரு.விராஜ் பண்டாரநாயக்க (NATAவின் சட்ட அலுவலர்) ஆகியோர் தமது பங்களிப்பை வழங்கினர்.





புகைப்படம் 65 & 66:புத்தசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கள அதிகாரிகளுக்கான புகையிலை மற்றும் மதுபானம் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

13 நிதிசார் முன்னேற்றம் (2022 சனவரி 01 முதல் டிசெம்பர் 31 வரை)

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை

2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில்

நிதிநிலை பற்றிய அறிக்கை

	குறிப்பு	2022 (ரூ)	2021(ரூ)
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
உட்கட்டமைப்பு வசதிகள்,பொறி மற்றும் உபகரணங்கள்	16	9,610,137.66	11,901,780.33
அருவச் சொத்துக்கள்	18	8,069,635.10	8,567,995.49
நடைமுறைச் சொத்துக்கள்			
சரக்குத் தொக்குகள்	19	65,894.14	46,638.92
வருமதிகள்	26	-	-
முன்கூட்டிய செலுத்தல்கள்	28	125,000.00	50,000.00
காசும் காசுக்குச் சமமானவைகளும்	20	1,820,811.92	1,198,009.00
மொத்த சொத்துக்கள்		**19,691,478.82**	**21,764,423.74**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அட்டுறுச் செலவினங்கள்	21	574,899.05	500,892.01
கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகள்	22	3,708,000.00	4,368,000.00
செலுத்த வேண்டியவைகள்	34	125.00	-
நடைமுறையல்லாப் பொறுப்புகள்			
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	22	946,400.00	687,157.50
மொத்தப் பொறுப்புகள்		**5,229,424.05**	**5,556,049.51**
மொத்த தேறிய சொத்துக்கள்		**14,462,054.77**	**16,208,374.23**
தேறிய சொத்துக்கள்/உரிமை முதல்			
மூலதனம்	24	6,560,893.26	6,560,893.26
அரச கொடை - மூலதனம்	25	16,416,564.15	19,206,567.21
திரண்ட மிகை/(பற்றாக் குறை)	29	(9,001,971.81)	(9,961,479.56)
முந்திய வருடத்திற்கான சீராக்கல்கள்	27	-	-
மூலதன ஆதாயம்	33	486,569.17	402,393.32
		14,462,054.77	**16,208,374.23**

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் தரநியமங்களின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் மற்றும் முன்னிலைப்படுத்தல் தொடர்பாக பணிப்பாளர் சபை பொறுப்புக்கூற வேண்டும். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளன.

.....	.....	.....
டாக்டர்.அலன் லூடொவைக்	சாக்ய நாணாயக்கார	பீ.எம்.எஸ்.பண்டார
தலைவர்	பணிப்பாளர்	பணிப்பாளர்

அனுஷிகா கோரளகே
கணக்காளர்

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை

2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான

நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

	குறிப்பு	**2022** (ரூ)	**2021** (ரூ)
தொழிற்பாட்டு வருமானம்			
அரச கொடை - மீண்டெழும்	9	30,390,000.00	22,883,000.00
வருமானம் – மூலதன மீளளிப்பு	31	9,027,325.20	8,218,725.00
ஏனைய வருமானம் (வழங்குனர் பதிவிலிருந்து/ பழைய சொத்துக்களின் விற்பனையினால் கிடைத்த மீள் செலுத்தப்படாத பணம்)	23	39,875.00	-
மூலதன கொடை இலதாக்கல்	30	2,825,753.06	2,583,951.20
மொத்த வருமானம்		**42,282,953.26**	**33,685,676.20**
தொழிற்பாட்டுச் செலவினம்			
ஊழியர் சம்பளம்	10	16,301,086.24	13,478,536.51
வழங்கல் மற்றும் நுகரக்கூடிய பொருட்கள்	11	605,033.33	423,987.49
பராமரிப்பு	12	478,375.64	506,886.06
ஒப்பந்தஞ்சார் சேவைகள்	13	11,860,031.43	11,056,849.53
தேய்மானம் மற்றும் இலதாக்கல்	14	2,825,753.06	2,583,951.19
நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான செலவினம்	32	9,162,479.96	7,152,584.64
மொத்த தொழிற்பாட்டுச் செலவினம்		**41,232,759.66**	**35,202,795.42**
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலமான மிகை/(பற்றாக்குறை)		**1,050,193.60**	**(1,517,119.22)**
நிதிக் கிரயம்			
வங்கிக் கட்டணங்கள்	15	6,510.00	6,300.00
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலமான தேறிய மிகை/ (பற்றாக் குறை)		**1,043,683.60**	**(1,523,419.22)**

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை
2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான
நிதிப் பாய்ச்சல் கூற்று

	குறிப்பு	2022	2021	
		ரூபா	ரூபா	
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலமான நிதிப் பாய்ச்சல்			வெளியிடப்பட்ட	மீள் வெளியிடப்பட்ட
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலமான தேறிய மிகை/ (பற்றாக் குறை)		1,043,683.60	(1,523,419.22)	(1,523,419.22)
சீராக்கல்கள்:	29			
அட்டுறுச் செலவுகளுக்கான சீராக்கல்கள்		-	(2,960,000.00)	(2,960,000.00)
தேய்மானங்களுக்கான சீராக்கல்கள்		-	1,155,241.16	-
நிதி அல்லாத நன்கொடை		-	-	(540,000.00)
தொழிற்படு மூலதன கட்டணங்களுக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்		**1,043,683.60**	**(3,328,178.06)**	**(5,023,419.22)**
தேய்மானத்தின் அதிகரிப்பு/ (குறைவு)	14	2,825,753.06	2,583,951.19	2,583,951.19
அரசாங்கத்தின் மூலதனக் கொடை இலதாக்கல்	30	(2,825,753.06)	(2,583,951.19)	(2,583,951.19)
இருப்பு(அதிப்பு)/குறைவு	19	(19,255.22)	(14,944.91)	(14,944.91)
வருமதிகளின் (அதிகரிப்பு)/குறைவு	26	-	-	-
முன்கூட்டிய செலுத்தல்கள் (அதிகரிப்பு)/குறைவு	28	(75,000.00)	-	-
செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு/(குறைவு)	34	125.00	-	-
அட்டுறு அதிகரிப்பு/(குறைவு)	21	74,007.04	229,307.82	229,307.82
(பணிக்கொடை மற்றும் கணக்காய்வுக் கட்டணம்) நிதி ஏற்பாடுகளில் அதிகரிப்பு/(குறைவு)	22	(400,757.50)	853,992.50	277,992.50
தொழிற்பாடுகளின் மூலம் ஈட்டப்பட்ட பணம்		**622,802.92**	**(2,259,822.64)**	**(4,531,063.81)**
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலமான தேறிய நிதிப் பாய்ச்சல்		**622,802.92**	**(2,259,822.64)**	**(4,531,063.81)**
முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான நிதிப் பாய்ச்சல்				
பொறி மற்றும் உபகரணங்கள் கொள்ளல்	16.1	(35,750.00)	(103,960.00)	(103,960.00)
அருவச் சொத்துக்களுக்கான	18.1	-	(4,314,980.00)	(4,314,980.00)

கொள்ளல்				
அகற்றக்கூடிய நிலையான சொத்துக்கள்	33	-	(84,175.85)	18,300.00
மூலதன மீளளிப்பு(அரசாங்க/வெளிநாட்டுக் கொடை கொடை)	25	35,750.00	2,525,290.00	4,418,940.00
முதலீட்டு செயற்பாடுகளின் மூலமான தேறிய நிதிப் பாய்ச்சல்		**-**	**(1,977,825.85)**	18,300.00
காசும் காசுக்குச் சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைவு)	20	622,802.92	(4,237,648.50)	(4,502,763.81)
வருடத்தின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும்(இலங்கை அரசாங்கம்)		1,192,609.34	1,712,497.48	1,987,612.80
வருடத்தின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (வெளிநாட்டு நிதி)		5,399.66	3,723,160.02	3,723,160.02
வருடத்தின் இறுதியிதில் காசும் காசுக்குச் சமமானவைகளும்		**1,820,811.92**	**1,198,009.00**	**1,198,009.00**

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை
2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில்
உரிமையாண்மை மாற்றக் கூற்று

	2022
	(ரூ)
2022.01.01 ஆம் திகதியில் NATA நிதியம்	**16,208,374.23**
கடந்த வருடங்களுக்கான சீராக்கல்கள்	-
கடந்த வருடங்களுக்கான மூலதனக் கொடை இலதாக்கல்	-
2022.01.01 திகதியில் சீராக்கப்பட்ட நிலுவை	**16,208,374.23**
மூலதன மீளளிப்பு	35,750.00
மூலதனக் கொடை இலதாக்கல்	(2,825,753.06)
மூலதன வருவாய்	-
காலப் பகுதிக்கான சீராக்கல்கள்	-
வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை)	1,043,683.60
2022.12.31 ஆம் திகதியில் நிலுவை	**14,462,054.77**

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. தயாரிப்புக்கான அடிப்படை

1.1 இணக்கக் கூற்று

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களானவை நிதிநிலை பற்றிய கூற்று, நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று, நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றைக் கொண்டு அமைந்துள்ளன. இந்த கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வகுக்கப்பட்டுள்ள இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தர நியமனங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2 செயற்படு மற்றும் சமர்ப்பண நாணயம்

அதிகார சபையின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய மரபின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு இலங்கை ரூபாயில் (ரூ.) சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.3 அரசாங்கக் கொடைகள்

அதிகார சபையானது இரண்டு வகையிலான அரசாங்கக் கொடைகளைப் பெறுகின்றது. அவையாவன,

- மூலதனக் கொடைகள்
- மீண்டெழும் கொடைகள்

மூலதனக் கொடைகள் பொதுத்துறை கணக்கீட்டுத் தரநியமங்களின் பிரகாரம் கணக்குப் பதியப்பட்டுள்ளன. இந்த முறையின்போது மூலதனக் கொடைகள் பிற்போடப்பட்ட வருமானமாக கருதப்பட்டுள்ளதோடு அது அடிப்படையில் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலத்தின் மீது இனங்காணப்பட்டுள்ளது.(உதாரணமாக: சொத்துக்களின் வருடாந்த தேய்மானம் செய்யப்பட்ட பெறுமதி வருடத்திற்கான வருமானமாக கணக்குப் பதியப்பட்டுள்ளது).மீண்டெழும் கொடையானது குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வருமானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு நிதிச் செயலாற்றுகை கூற்றிற்கு வரவும் வைக்கப்பட்டுள்ளது.

2. சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை

2.1. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயமானது சொத்துக்களை அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டின் பொருட்டு அதன் செயற்படு நிலைமைக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செலவினத்துடன் கொள்ளல் அல்லது நிர்மாணித்தலுக்கான கிரயமாகும்.

சொத்துக்களை பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடிய திகதி தொடக்கம் விற்றொழிக்கப்படும் திகதிவரை தேய்மானம் வழங்கப்பட்டுள்ளது. பொறி மற்றும் உபகரணங்கள் என்பன பின்வரும் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யப்படும். மேலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இல் விதப்புரை

செய்யப்பட்டுள்ள வகையில் பொறி மற்றும் உபகரணங்கள் கிரய முறையில் கணக்குப் பதியப்பட்டுள்ளன.

பிரதான வருடாந்த விகிதங்கள் பின்வரும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கட்டிடங்கள் மற்றும் பொருத்துகைகள்	25 வருடங்கள்(4%)
இயந்திர சாதனங்களும் உபகரணங்களும்	10 வருடங்கள்(10%)
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	10 வருடங்கள்(10%)
கணினிகள்	5வருடங்கள் (20%)
வாகனங்கள்	10 வருடங்கள்(10%)
ஏனையவை	10 வருடங்கள்(10%)

ஒரு சொத்துக்கான தேய்மான விகிதத்தில், நிலுவை பெறுமதிக்கான பயனுள்ள ஆயுட்காலத்தில் கணிசமான மாற்றம் ஏற்பட்டுள்ளதாக காட்டப்படும் பட்சத்தில் அச்சொத்தின் தேய்மானமானது புதிய எதிர்பார்ப்பினை பிரதிபலிப்பதற்காக எதிர்காலம் கருத்திற் கொள்ளப்பட்டு திருத்தப்படும்.

ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செயலாற்றுகைத் தரநியமத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்களை பேணிச் செல்லும் பொருட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான திருத்தம் அல்லது பராமரிப்பின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அவ்வாறு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் செலவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

2.2 அருவச் சொத்துக்கள்

மென்பொருள்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் அருவச் சொத்தாக ஏற்றுக்கொள்ளப்படுவதோடு அச்சொத்துக்கள் அவற்றிற்கான பயனுள்ள ஆயுட்காலம் பூராக மதிப்பிறக்கம் செய்யப்படும். பிரதான வருடாந்த வீதங்கள் பின்வருமாறு அமைகின்றன.

அருவச் சொத்துக்கள் 20 வருடங்கள் (5%)

3. சரக்குத் தொக்குகள்

சரக்குத் தொக்குகள் கிரயத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

4. காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்குச் சமமானவைகளும் கையில் உள்ள பணம் மற்றும் வங்கியில் உள்ள பணம் என்பவற்றைக் கொண்டு அமைந்திருக்கும்.

5. பொறுப்புகள்

கடந்த கால நிகழ்வுகளின் பெறுபேறாக நடப்பு கடப்பாடு உள்ளபோது ஐந்தொகைப் பத்திரத்தில் பொறுப்புகள் ஏற்பிசைவு செய்யப்படும். கடன்தருநர்களின் வேண்டுகோளின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய அல்லது ஐந்தொகைப் பத்திரத்தின் திகதி தொடக்கம் ஒரு வருடத்திற்குள் செலுத்தப்படவேண்டிய கடப்பாடுகள் ஐந்தொகைப் பத்திரத்தின் நடப்பு பொறுப்புகளாக கருதப்படும்.

6. வருமானம் ஏற்றுக்கொள்ளப்படுதல்

மூலதனக் கொடைகள் மற்றும் வெளிநாட்டுக் கொடைகள் பிற்போடப்பட்ட வருமானமாக அடையாளங் காணப்பட்டுள்ளன. மீண்டெழும் கொடைகள் காலப்பகுதிக்கான வருமானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டுள்ளன. அனைத்து செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

7. பங்களிப்புத் திட்டங்கள்

நிறுவனமானது ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் முறையாக 12% மற்றும் 3% வீதம் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி சார்பாக பங்களிப்புச் செய்கின்றது.

8. நிதிப் பாய்ச்சல் கூற்று

நேரில் முறை பயன்படுத்தப்பட்டு நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை
2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தின் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

குறிப்பு 9	2022	2021
மீண்டெழுபவையின் மீளளிப்பு	(ரூ)	(ரூ)
மீண்டெழுபவையின் மீளளிப்பு (9.1)	30,390,000.00	22,883,000.00
மொத்தம்	30,390,000.00	**22,883,000.00**

குறிப்பு : 10	2022	2021
ஊழியர் சம்பளம்	(ரூ)	(ரூ)
பணியாட்டொகுதிக்கான சம்பளம்	14,282,987.90	11,594,640.25
ஊ.சே.நி. பங்களிப்புத் தொகை	1,337,257.72	1,173,602.14
ஊ.ந.பொ.நி. பங்களிப்புத் தொகை	334,314.42	293,400.54
மேலதிக நேர வேலை	82,843.70	198,321.69
பணிகொகொடைச் செலவுகள்	259,242.50	193,992.50
புதிய ஆட்சேர்ப்புகளுக்கான செலவினம்	4,440.00	24,575.00
பண்டிகை கடனுக்காக உறப்பட்ட செலவினம்	-	4.39
மொத்தம்	**16,301,086.24**	**13,478,536.51**

குறிப்பு 11	2022	2021
வழங்கல் மற்றும் நுகரக்கூடிய பொருட்கள்	(ரூ)	(ரூ).
காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள்	103,147.22	159,748.49
எரிபொருள்	393,314.00	215,668.00
உணவு/இலகு உணவு பானங்கள்	108,572.11	48,571.00
மொத்தம்	**605,033.33**	**423,987.49**

குறிப்பு 12	2022	2021
பராமரிப்பு	(ரூ)	(ரூ)
வாகனப் பராமரிப்பு	241,462.02	331,363.97
அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு (கணினிகள் மற்றும் இயந்திர சாதனங்கள்)	236,913.62	175,522.09
மொத்தம்	**478,375.64**	**506,886.06**

குறிப்பு 13	2022	2021
ஒப்பந்தஞ்சார் சேவைகள்	(ரூ)	(ரூ)
தபால் கட்டணங்கள்	31,465.00	14,885.00
தொலைபேசி/இணையத்தள கட்டணங்கள்	174,342.79	154,553.66
கட்டிட வாடகை/துப்பரவுச் சேவைகள்	8,965,470.35	8,611,188.03
மின்சாரக் கட்டணங்கள்	717,573.29	602,320.84
நிர்வாக சபை உறுப்பினர் கட்டணங்கள் மற்றும் உபசரிப்புகள்	955,044.00	848,913.00
வர்த்தக விளம்பரங்கள்/ஏனைய செலவுகள்	82,301.00	164,989.00
கணக்காய்வுக் கட்டணங்கள்	660,000.00	660,000.00
EB பரீட்சைக் கட்டணங்கள்	273,835.00	-
மொத்தம்	**11,860,031.43**	**11,056,849.53**

குறிப்பு 14	2022	2021
தேய்மானம் – ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள்	(ரூ)	(ரூ)
கட்டடங்கள் மற்றும் பொருத்துகைகள்	99,290.00	99,290.00
இயந்திர சாதனங்களும் உபகரணங்களும்	158,666.16	158,288.22
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	183,714.75	180,960.95
கணினிகள்	442,567.83	399,897.72
வாகனங்கள்	1,414,350.00	1,414,350.00
ஆடியோ வீடியோ காட்சிகள்	-	-
ஏனையவை	28,803.93	28,428.38
தேய்மானம்- அருவச் சொத்துக்கள்		
அருவச் சொத்துக்கள்	498,360.39	302,735.92
மொத்தம்	**2,825,753.06**	**2,583,951.19**

குறிப்பு 15	2022	2021
நிதிக் கிரயம்	(ரூ)	(ரூ)
வங்கிக் கட்டணங்கள்	6,510.00	6,300.00
மொத்தம்	**6,510.00**	**6,300.00**

குறிப்பு 16	2022	2021
பொறி மற்றும் உபகரணங்கள் (16.1)	(ரூ)	(ரூ)
கட்டடங்கள் மற்றும் பொருத்துகைகள்	1,934,782.34	2,004,422.34
இயந்திர சாதனங்களும் உபகரணங்களும்	621,249.72	779,915.88
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	783,221.05	966,935.80

கணினிகள்	1,171,067.78	1,608,685.61
வாகனங்கள்	4,922,208.08	6,336,558.08
ஏனையவை	177,608.08	205,262.61
மொத்தம்	**9,610,137.66**	**11,901,780.33**

குறிப்பு 18	2022	2021
அருவச் சொத்துக்கள்	(ரூ)	(ரூ)
அருவச் சொத்துக்கள் (18.1)	8,069,635.10	8,567,995.49
மொத்தம்	**8,069,635.10**	**8,567,995.49**

குறிப்பு: 19	2022	2021
சரக்குத் தொக்குகள் (19.1)	(ரூ)	(ரூ)
காகிதாதிகள்	65,894.14	46,638.92
அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு	-	-
மொத்தம்	**65,894.14**	**46,638.92**

குறிப்பு 20	2022	2021
காசும் காசுக்குச் சம்மானவைகளும்	(ரூ)	(ரூ)
இலங்கை வங்கி, பத்தரமுல்லை க/இ. 0077769376, 2022.12.31 ஆம் திகதியில் நிலுவை	1,815,412.26	1,192,609.34
இலங்கை வங்கி, தப்ரொபேன் க/இ. 008724393, 2022.12.31 ஆம் திகதியில் நிலுவை	5,399.66	5,399.66
கையிலுள்ள பணம்	-	-
மொத்தம்	**1,820,0811.92**	**1,198,609.34**

குறிப்பு 21	2022	2021
அட்டுறுச் செலவினங்கள்	(ரூ)	(ரூ)
முன் கொ/வ நிலுவை 30/12	150.01	-
மேலதிக நேர வேலை	-	59,396.08
எரிபொருள் செலவு	105,400.00	22,903.00
மின்சாரம்	152,836.46	72,422.80
பணியாட்டொகுதி சம்பளம்	280,367.22	254,121.25
தொலைபேசி/இணையத்தள கட்டணம்	14,665.37	14,218.43
ஏனைய செலவுகள் (செய்தித்தாள் வழங்குதல்)	2,730.00	1,320.00

உணவுக்கான செலவுகள் (குடிநீர் வழங்கல்)	18,900.00	3,000.00
புகையிலைச் செய்கைக்கான மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் மீதான செலவுகள்	-	73,510.45
2021 ஆம் ஆண்டுக்கான மின் கட்டனம்(2021 டிசெம்பர் மாதத்தின் மின்கட்டன மிகை மதிப்பீடு)	(150.01)	-
மொத்தம்	**574,899.05**	**500,892.01**

குறிப்பு: **22**	**2022**	**2021**
நிதி ஏற்பாடுகள்	(ரூ)	(ரூ)
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	946,400.00	687,157.50
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள்	3,708,000.00	4,368,000.00
மொத்தம்	**4,654,000.00**	**5,055,157.50**

குறிப்பு: **23**	**2022**	**2021**
ஏனைய வருமானம்	(ரூ)	(ரூ)
வருமானம் ஏனைய/மீள் செலுத்தப்படாத வைப்பு	39,875.00	-
மொத்தம்	39,875.00	-

குறிப்பு: **24**	**2022**	**2021**
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்	(ரூ)	(ரூ)
NATA நிதியம்	6,560,893.26	6,560,893.26
மொத்தம்	**6,560,893.26**	**6,560,893.26**

குறிப்பு: **25**	**2022**	**2021**
அரசாங்கக் கொடைகள் - மூலதனம்	(ரூ)	(ரூ)
மு/கொ நிலுவை	19,206,567.21	17,371,578.41
மூலதன மீளளிப்பு (25.1)	2,000,000.00	5,357,000.00
வெளிநாட்டுக் கொடை மீளளிப்பு(25.2)	7,063,075.20	7,147,165.00
மூலதனக் கொடை மதிப்பிறக்கம் (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்,புலமைச் சொத்து, அருவச் சொத்து மீதான தேய்மானம்)	(2,825,753.06)	(2,583,951.20)
வருடத்திற்கான வருமானம்	(9,027,325.20)	(8,085,225.00)
மொத்தம்	**16,416,564.15**	**19,206,567.21**

குறிப்பு: **26**	**2022**	**2021**
வரவேண்டியவை	(ரூ)	(ரூ)
பண்டிகை முற்பணம்	-	-
மொத்தம்	**-**	**-**

குறிப்பு: **27**	**2022**	**2021**
கடந்த வருடத்திற்கான சீராக்கல்கள்	(ரூ)	(ரூ)
மு/கொ நிலுவை	-	-
மொத்தம்	**-**	**-**

குறிப்பு: **28**	**2022**	**2021**
முன்கூட்டிய செலுத்தல்கள்	(ரூ)	(ரூ)
நிகழ்ச்சிகளுக்கான முற்பணம்(பீஎச்ஐ பாராட்டுவிழா தொடர்பில் பீஎம்ஐசீஎச் இற்கு மேற்கொள்ளப்பட்ட மீள் பெறக்கூடிய வைப்பு)	75,000.00	-
எரிபொருள் வழங்குனருக்கான வைப்பு	50,000.00	50,000.00
முன்கூட்டிச் செலுத்திய உழைக்கும்போது செலுத்தும் வரி	-	-
மொத்தம்	**125,000.00**	**50,000.00**

.

குறிப்பு: **29**	**2022**	**2021**
திரண்ட மிகை/பற்றாக்குறை (வருமான மற்றும் செலவினக் கணக்கு)	(ரூ)	(ரூ)
மு/கொ நிலுவை	(9,961,479.56)	(6,633,301.51)
காலப்பகுதிக்கான மிகை/(பற்றாக்குறை)	1,043,683.60	(1,523,419.22)
கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகள்	-	576,000.00
GATS ஆய்வு மீதான செலுத்தல்களுக்கான ஏற்பாடுகள்	-	(3,536,000.00)
திரண்ட தேய்மானம் – அருவச் சொத்துக்கள் (2016-2018வரை திரண்ட தேய்மானம்)	-	1,155,241.16
2021 ஆம் ஆண்டின் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள்	(84,175.85)	-
மொத்தம்	**(9,001,971.81)**	**(9,961,479.56)**

குறிப்பு: **30**	**2022**	**2021**
மூலதன கொடை மதிப்பிறக்கம்	(ரூ)	(ரூ)
அரச கொடை – மூலதனம்	2,825,753.06	2,583,951.20
மொத்தம்	2,825,753.06	**2,583,951.20**

குறிப்பு**: 31**	**2022**	**2021**
வருமானம்	(ரூ)	(ரூ)
மூலதன மீளளிப்பு (25.1)	1,969,200.00	4,026,060.00
WHO விலிருந்து கிடைத்த பணம்	7,058,125.00	4,059,165.00
ஏனைய வருமானம்	-	133,500.00
மொத்தம்	**9,027,325.20**	**8,218,725.00**

குறிப்பு: 32	2022	2021
செலவுகள்	(ரூ)	(ரூ)
நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் (திறைசேரியிலிருந்து கிடைத்த நிதி)	2,177,865.21	3,378,148.83
நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் (WHO/Bloomberg இலிருந்து கிடைத்த நிதி)	6,984,614.75	3,774,435.81
மொத்தம்	**9,162,479.96**	**7,152,584.64**

குறிப்பு: 33	2022	2021
மூலதன வருவாய்	(ரூ)	(ரூ)
மு/கொ நிலுவை	402,393.32	-
மீள் மதிப்பீடு – கணினிகள் மற்றும் கணினி உபகரணங்கள்	-	486,569.17
2022 இல் நீக்கக்கூடிய நிலையான சொத்துக்கள்	84,175.85	(84,175.85)
மொத்தம்	**486,569.17**	**402,393.32**

குறிப்பு 34:	2022	2021
செலுத்த வேண்டியவைகள்	(ரூ)	(ரூ)
முன்கொண்டு வரப்பட்ட நிலுவை	-	-
செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம்	(125.00)	-
மொத்தம்	**(125.00)**	**-**

குறிப்பு **35:**

பிழைகள் ஏற்பட்ட, சமர்ப்பிக்கப்பட்ட முன்னைய காலப்பகுதிக்காக, ஒப்பீட்டு ரீதியான தொகைகளை மீண்டும் குறிப்பிடுவதன் மூலம் வெளிப்படுத்துதல்

- 2020 ஆம் ஆண்டு கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீட்டின் 576,000 ரூபாவிலான மிகைஒதுக்கீடானது 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றில் இலாபத்திற்கு சீராக்கப்பட்டுள்ளது. எனவே, 2021 ஆம் நிதி ஆண்டில் தொழிற்பாட்டுப் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு சொத்துக்கள் கையுதிர்வின் மீதான 84,175.85 ரூபாவிலான நட்டம் அவ்வாண்டின் தொழிற்பாட்டு பற்றாக்குறைக்கு கணக்குப் பதியப்படவில்லை. இச்சந்தர்ப்பத்தில் மீளாய்வு ஆண்டின் பற்றாக்குறை நிதிக்கூற்றுக்களில் அந்த அளவினால் குறைவாக காட்டப்பட்டுள்ளது. இது 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்பட்டுள்ளது.
- 133,500.00 ரூபாவிலான மீள் செலுத்தப்படாத வைப்புகள் மற்றும் விற்பனையின் மூலம் பெறப்பட்ட பணம், 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றின் 31 ஆம் குறிப்பின் கீழ் மூலதன மீளளிப்பாக இனங்காணப்படுள்ளது, 2022 ஆம் ஆண்டு கிடைத்த இதர வருமானங்கள் நிதிக் கூற்றில் இலக்கம் 23 இன் கீழ் சரியாக இனங்காணப்பட்டுள்ளது.

- கடந்த வருடங்களில் அச்சிடப்பட்ட ஸ்ரிக்கர்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றம் சுவரொட்டிகளின் பெறுமதி ஒப்பீட்டு ரீதியில் நிதிக் கூற்றுக்களின் மீது தாக்கம் ஏற்படுத்தவில்லை என அதிகார சபை இனங்கண்டுள்ளது.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை

2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

குறிப்பு 36

பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் தொடர்புடைய தரப்புக்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர் சபை உறுப்பினர்	பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஏனைய நிறுவனங்கள்	வகிக்கும் பதவி	நியமனத் திகதி	காலப்பகுதி
டாக்டர். சமாதி ராஜபக்ஷ, தலைவர், புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை	-	-	-	-
வண.எல்லே குணவங்ச தேரர், அமைச்சரின் நியமனம்	-	-	-	-
டாக்டர் லக்ஷ்மி சோமதுங்க - மேலதிக செயலாளர் (பொது சுகாதார சேவை), சுகாதார அமைச்சு	விக்டோரியா இல்லம்	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020 சனவரி	நிரந்தர உறுப்பினர்
	அங்கவீனமுற்ற ஆட்களுக்கான தேசிய பேரவை	உறுப்பினர்	2021 அக்டோபர்	-
	மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் பேரவை	உறுப்பினர்	2021 ஏப்ரல்	-
திரு.சுமித் அபேசிங்க, கௌரவ சுகாதார அமைச்சரின் நியமனம்	இலங்கை நிதி ஆணைக்குழு	தலைவர்	2020.12.03	03வருடங்கள்
	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்	உறுப்பினர்	2020 மார்ச்	03வருடங்கள்
திரு.சுதீர ஜயரத்ன பணிப்பாளர்- விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு	தேசிய கைப்பணிகள் சபை	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2020.01.05	02 வருடங்கள்

திரு.கமல் சில்வா சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்	பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான அதிகார சபை	பணிப்பாளர் சபை உறுப்பினர்	202 ஆகஸ்ட்	அவர் பதவி வகிக்கும் வரை
திரு. எம்.ஜே.குணசிறி மதுவரி ஆணையாளர் நாயகம்	-	-	-	-
திரு.எஸ்.ஆர்.டப்ளியூ.ஆர்.பீ.சத்குமார - மேலதிகச் செயலாளர்– தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு	இலங்கை ரூபவாஹினீ கூட்டுத்தாபனம்	அமைச்சின் பிரதிநிதி	2021.07.12	-
	செலசின் தொலைக்காட்சி நிறுவகம்	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2021.02.23	-
திரு.சாக்ய நாணாயக்கார, தலைவர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை	-	-	-	-
திருமதி.ஹிரண்யா பெரேரா நீதி அமைச்சு, சிரேஸ்ட உதவிச் செயலாளர்	இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு	ஆணையாளர்	2019.02.18	03 வருடங்கள்
திருமதி. பீ.எம்.எஸ்.பண்டார- மேலதிக செயலாளர், வர்த்தக அமைச்சு	-	-	-	-
திரு.சுனில் சாந்த வீரசேகர கௌரவ அமைச்சரின் நியமனம்.	மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, சப்ரகமுவ மாகாணம்	உறுப்பினர்	2022	03 வருடங்கள்
	சப்ரகமுவ பல்கலைக்கழகம்	நிருவாக சபை உறுப்பினர்	2020	03 வருடங்கள்
	சமூகப் பாதுகாப்பு நிருவாகம்	பணிப்பாளர் சபை உறுப்பினர்	2022	03 வருடங்கள்
திருமதி. கமனீ குணரத்ன- பணிப்பாளர், பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு, கல்வி அமைச்சு	-	-	-	-
திருமதி. விஜயானி ரத்நாயக்க - கௌரவ சுகாதார அமைச்சரின் நியமனம்	-	-	-	-

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. } එච්එස්එම්/සී/එන්ඒරීඒ /1/19/27
ඔබේ අංකය உமது இல. Your No. }
දිනය திகதி Date } 2019 ජූලි 31 දින

எனது இல: ரீஎச்ஓ/பீ/என்ஏரீஏ/1/22/04 திகதி : 2023 மே 19

தலைவர்,

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள், சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும்போது ஒரு வகுப்புக்கான சொத்துக்களை ஒரே தடவையில் மீள்மதிப்பீடு செய்ய வேண்டுமென்ற போதிலும் அதற்கு முரணாக அதிகார சபைக்குச் சொந்தமான கணினிகள் மற்றும் உபகரணங்களுக்கு மத்தியில் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 257,180 ரூபா நிகரப் பெறுமதியுடனான கணினிகள் மற்றும் உபகரணங்களை மட்டும் 2022 பெப்ருவரி 28 ஆம் திகதி 743,750 ரூபாவிற்கு மீள்மதிப்பீடு செய்து 486,570 ரூபாவிலான மீள்மதிப்பீட்டு இலாபம் கடந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததோடு இந்த மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் மீது அடிப்படையாக அமைந்து கடந்த வருடத்திற்காகவும் மீளாய்வாண்டுக்காகவும் வருடாந்தம் 148,750 ரூபா தேய்மானம் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குப் பதியப்பட்டிருந்தது. மேலும் தொழில்சார் தகைமையுடைய மதிப்பீட்டுத் தொழிலின் உறுப்பினர் அல்லாத குழுவொன்றினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாலும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளின் திட்பநுட்பம் மற்றும் மீள்மதிப்பீடு நடைமுறைக்கு வரும் திகதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதாலும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகள் கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைதாக்கிக்கொள்வதன் திட்பநுட்பம் தொடர்பாகவும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியின் மீது கடந்த ஆண்டுக்காகவும் மீளாய்வாண்டுக்காகவும் ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்டிருந்த 297,500 ரூபாவிலான தேய்மானத்தை சீர்படுத்தும் திட்பநுட்பம் தொடர்பாகவும் திருப்தியடைய முடியவில்லை.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 அதிகார சபையின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகார சபையின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதுபற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களாக கருதப்படும். குறித்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் அரவணைக்கப்படமாட்டாது என்பதுடன் அது தொடர்பிலான எத்தகைய உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுக்குரியதாக எனது பொறுப்பாக இருப்பது மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிப்பதும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறுவகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையான வகையில் இணங்கவில்லையா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதுமாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகவல்களின் அடிப்படையிலும், என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மீதும் அடிப்படையாக அமைந்து மேற்படி ஏனைய தகவல்கள் பொருண்மையான ரீதியில் தவறாக காட்டப்பட்டுள்ளதென தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அதனை நான் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். இது தொடர்பில் பதிவு செய்வதற்கு எதுவுமில்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவதற்கான அதன் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் அதிகார சபையின் தொடர்ச்சியான இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்போது அது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கும் நோக்கம் இல்லாத போதிலும் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவனத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை தரப்புகள் விழிப்பூட்டப்பட்டன.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் தாக்கத்தினை தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு எனது விசாரணையின் மூலம் காணப்படுகின்ற வகையில் உரிய நிதிசார் அறிக்கைகள் அதிகார சபையினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி 1.2(அ) விதப்புரையைத் தவிர ஏனைய விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டதனுள் பின்வரும் கூற்றுக்களை முன்வைக்கும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையின் ஓர் அங்கத்தவருக்கு அதிகார சபை தொடர்புபட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வர்த்தக நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12((ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர சம்பந்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாத வகையில் செய்யப்பட்டுள்ளது என்பது.

சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுடனான தொடர்பு	அமைந்தொழுகாமை
(அ) 1978 ஆம் ஆண்டின் 842 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 செப்டெம்பர் 01 ஆம் திகதிய DMA/2009 (2) இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி	2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில் 32,524,756 ரூபாவாக அமைந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டுப் பெறுமானங்களை உள்ளடக்கக்கூடிய வகையில் நிலையான சொத்துக்கள் பற்றிய முறையான ஆவணமொன்று பேணப்படவில்லை என்பதோடு அதற்குப் பதிலாக சொத்துக்களின் வகைகள் காட்டப்படும் வகையில் பிரதான பொருட்பதிவேடு மட்டும் பேணப்பட்டிருந்தது.
(ஆ) 2015 செப்டெம்பர் 25 ஆம் திகதிய SP/SB/07/15 ஆம் இலக்கமுடைய சனாதிபதி செயலக சுற்றறிக்கை	வெளிநாட்டு உதவிகள்/கடன் இந்நாட்டுக்கு வழங்கப்படுவது நாட்டின் அபிவிருத்திக்காகவே அன்றி அதிக செலவினத்துடன்கூடிய நிகழ்ச்சிகளுக்காக பயன்படுத்துவதற்கல்ல எனவும், தமது அத்தியாவசிய நிகழ்ச்சித்திட்டங்களை குறைந்த செலவினத்தில் ஒழுங்கு செய்ய வேண்டுமெனவும் அரசாங்கத்தினால் வசதிகள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களை அதற்காக பயன்படுத்த வேண்டுமெனவும் மேற்படி சற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு முரணாக 02 நிகழ்ச்சிகளும் 02 கூட்டங்களும் அதிக செலவினத்துடன்கூடிய தனியார் ஹோட்டல்களில் நடத்தப்பட்டிருந்ததோடு அதற்காக 1,057,385 ரூபா அதிகார சபையினால் செலவிடப்பட்டிருந்தது.
(இ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சி சுற்றறிக்கை	நிதி ஆண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்ற போதிலும் அதிகார சபையானது மீளாய்வு ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை 22 நாட்கள் தாமதமடைந்து கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருந்தது.
(ஈ) 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய சீஜீஐஆர்/2021/02-02 ஆம் இலக்கமுடைய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கடிதம்.	அரச நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களால் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி பற்றிய தகவல்கள் உரிய மாதிரிப் படிவங்களின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டும் முடிவுற்று அடுத்துறும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்ற போதிலும் அதிகார சபை அவ்வாறு மீளாய்வாண்டு முழுவதும் செயற்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர அதிகார சபையின் தத்துவங்கள், கருமங்கள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது.

(அ) அதிகார சபையின் அறிக்கைகளின் படி தற்போது புகையிலை உற்பத்திகள் தொடர்பில் இலங்கையில் காணப்படுகின்ற வரிவிதிப்பு கட்டமைப்பானது முறைசாரற்ற மற்றும் சிக்கல்மிகுந்ததாக உள்ளதென்பதும் அது சில வரி வகைகளைக் கொண்டமைந்துள்ளது என்பதும் புகையிலை உற்பத்திகள் தொடர்பில் காணப்படுகின்ற வரிவிதிப்பு ஊடாக அறவிடப்படுகின்ற வரிகளின் அனுகூலத்தில் நூற்றுக்கு 51 சதவீதம் புகையிலைக் கைத்தொழில் துறையைச் சென்றடைகின்றது என்பதும் 2016 ஆம் ஆண்டில் சிகரெட் மீதான மதுவரி வருமானம் அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 7.3 ஆக அமைந்த போதிலும் அது 2020 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 3.1 வீதம் வரை வீழ்ச்சி அடைந்திருப்பதும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அதிகார சபையினால் 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் உலக சுகாதார அமைப்பின் நிதி அளிப்புகள் மற்றும் உள்நாட்டு நிதியாக 994,148 ரூபா செலவினை மேற்கொண்டு புகையிலைக்காக புதிய வரிவிதிப்பு சூத்திரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததோடு மேற்படி புதிய வரிவிதிப்பு சூத்திரத்தைப் பயன்படுத்தி 2021 ஆம் ஆண்டில் 91.6 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட சிகரெட் மீதான மதுவரி வருமானம் 2026 ஆம் ஆண்டாகும் போது 124.6 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துக் கொள்ள முடியுமெனவும் அது புகையிலை நுகர்வு நூற்றுக்கு 1.1 சதவீதத்தினால் குறைவடைவதற்கும் வருடாந்த அரச வருமானம் நூற்றுக்கு 6 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் காரணமாக அமையுமெனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புகையிலைக்கான புதிய வரிவிதிப்புச் சூத்திரம் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் சட்டமாக மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 35(2)(இ) பிரிவின் பிரகாரம் புகையிலை உற்பத்திகள் அல்லது மதுசார உற்பத்திகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் புகையிலை உற்பத்திகளும் மதுசார உற்பத்திகளும் அவ்விடத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக அறிவித்து அவற்றின் விலைகளைக் குறிப்பிட்டு உரிய அளவிலான விளம்பரத்தை காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி பிரிவிற்கு ஏற்புடையதாக அமையும் வகையில் கட்டளைகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால் சட்டத்தின் கீழ் அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு புகையிலை உற்பத்திகள் அல்லது மதுசார உற்பத்திகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்களை ஒழுங்குபடுத்துவதற்கு முடியாமல் போயுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதிய 1770/ 15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் 2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 34அ(5) ஆம் பிரிவின் பிரகாரம் சிகரெட் மற்றும் புகையிலை உற்பத்தியாளர்களுக்கு உடல்நல எச்சரிக்கைகளை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மாற்றியமைத்து சிகரெட்டு சிப்பங்கள், பொதிகள் அல்லது அட்டைப் பெட்டிகள் மீது காட்சிப்படுத்தக் கூடியவகையில் மேற்படி வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 08 உடல்நல எச்சரிக்கைகளின் தொகுப்பை விரிவாக்குவதற்காக 2022 ஆம் ஆண்டில் 10 உடல்நல எச்சரிக்கைகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவை வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை (Categorize). அத்தோடு இந்த அறிக்கையின் திகதி வரையிலும் மேற்படி புதிய உடல்நல எச்சரிக்கைகள் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த அறிக்கையின் திகதி வரையான 08 வருட காலப்பகுதியில் 08 உடல் நல எச்சரிக்கை தொகுப்பினை மட்டும் பயன்படுத்தியதன் மூலம், உடல்நல எச்சரிக்கைகளை மாற்றியமைத்ததன் ஆக்கவிளைவினை அதிகரித்துக் கொள்வதற்கும் அதிகார சபை தவறியிருந்தது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் அதிகார சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் உரிய காலப்பகுதிகளில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

3. ஏனைய விடயங்கள்

(அ) அதிகார சபையின் பொது முகாமையாளர் பதவிக்கு 2021 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த விண்ணப்பதாரரை (பெண் அலுவலர்) அதிகார சபையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் 4.1 ஆம் பந்தியின் கீழ் தரப்பட்டுள்ள தேவையான ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்திராத நிலையில் பொது முகாமையாளர் பதவிக்கு நியமித்து 2022 ஜூன் மாதம் வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக 1,991,574 ரூபா செலுத்தப்பட்டிருந்த போதிலும் பொது முகாமையாளர் பதவிக்கான விடயப் பரப்பின் கடமைகளை நிறைவேற்றும்போது மேற்படி அலுவலரின் செயற்றிறனின்மை காரணமாக அவரது சேவை 2022 ஜூலை மாதம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு அதிகார சபையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் பிரகாரம் தேவையான ஆகக்குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பதாரர் ஒருவரை பொது முகாமையாளர் பதவிக்கு நியமித்திருப்பதன் மூலம் மேற்படி பதவியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகையை அடைந்து கொள்வதற்கு அதிகார சபை தவறியிருந்ததன் காரணமாக உறப்பட்டிருந்த 1,991,574 ரூபாய் செலவானது பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2022 ஆம் ஆண்டில் 1948 எனும் உளவியல் ஆலோசனை சேவையைப் பேணிச் செல்லல் மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றுக்காக அதிகார சபையினால் 1,191,547 ரூபா செலவு செய்யப்பட்டிருந்ததோடு உளவியல் ஆலோசனைச் சேவையை வழங்குவதற்காக ஒப்பந்த அடிப்படையில் வருடம் முழுவதிலும் இரண்டு பெண் உளவியல் ஆலோசகர்கள் சேவையாற்றியிருந்தனர். அத்தோடு அதிகார சபையினால் 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் 1,307,282 ரூபா செலவினை மேற்கொண்டு மூன்று சந்தர்ப்பங்களில் உளவியல் ஆலோசனைச் சான்றிதழ் பாடநெறிகள் நடத்தப்பட்டு 108 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததோடு அவர்களில் 83 பேருக்கு தொண்டர் அடிப்படையில் சம்பளம் அல்லது கொடுப்பனவுகள் இன்றி அலுவலக நேரத்தின் பின்னர் மேற்படி உளவியல் ஆலோசனைச் சேவையில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி 2022 ஆம் ஆண்டு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த மொத்த அழைப்புகளின் எண்ணிக்கை 3666 என்பதோடு அதில் 2085 அழைப்புகளுக்கு தொண்டர் அடிப்படையில் பணியாற்றும் உளவியல் ஆலோசனைச் சேவை அலுவலர்கள் ஆலோசனை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும் 143 நாட்களில் மேற்கொண்ட உளவியல் ஆலோசனைகளின் எண்ணிக்கை தொடர்பில் மேற்படி தொண்டர் அலுவலர்கள் அதிகாரசபைக்கு

அறிக்கையிட்டிருக்கவில்லை. அத்துடன் தொண்டர் அலுவலர்கள் ஆலோசனை வழங்கிய அழைப்புகளின் எண்ணிக்கை மாத்திரம் அறிக்கையிட்டிருந்ததோடு அவர்கள் வழங்கியிருந்த சேவையின் பண்புத்தரம் தொடர்பான மதிப்பீடொன்றை அதிகார சபை மேற்கொண்டதற்கான எழுத்து மூலமான சான்றுகள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி தொண்டர் உளவியல் ஆலோசனைச் சேவை அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆலோசனைச் சேவை தொடர்பில் அதிகார சபையின் மேற்பார்வை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டிருந்தது.

(இ) 2019 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதிய 09/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக 2019 ஜூலை மாதம் தொடக்கம் 2021 டிசம்பர் மாதம் வரையில் அதிகார சபையின் 13 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த 690,648 ரூபா இடைக்கால கொடுப்பனவு மற்றும் 2021 ஜூன் மாதம் 15ஆம் திகதிய 21/ஆளைஉ(032) ஆம் இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளரின் 2021 ஜூன் மாதம் 16 ஆம் திகதிய Min/add/See/Admin/16/21 ஆம் இலக்கமுடைய கடிதத்திற்கு முரணாக 2021 ஜூன் மாதம் தொடக்கம் 2021 ஆகஸ்ட் மாதம் வரை அதிகார சபையின் பணியாட்டொகுதியைச் சேர்ந்த 12 பேருக்கு செலுத்தப்பட்ட 262,375 ரூபா விசேட கொடுப்பனவு என்பன இந்த அறிக்கையின் திகதி வரையிலும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது அதற்கு பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட்டுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2021 நவம்பர் மாதம் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.4ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டு சார்பாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி